விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 09 திங்கட்கிழமை (26.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

## வரதராஜப் பெருமாளை முதலமைச்சராக்க முயற்சி

(கொழும்பு)

அடுத்த வருடம் ஆரம்பப் பகுதியில் நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலில் இணைந்த வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான வரதராஜப் பெருமாளை ஆளுந்தரப்பு முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த அரச தரப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

வரதராஜப் பெருமாள் இறுதியாக இலங்கை வந்திருந்தபோது ஆளும்தரப்பைச் சேர்ந்த சில சிரேஷ்ட அமைச்சர்களும் முக்கியஸ்தர்களும் அவரைச்சந்தித்துக் கலந்துரையாடினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையைத் தீர்த்திருந்தால் வெளிநாடுகள் ஏன் தலையிடுகின்றன?

### மகிந்தவிடம் மன்மோகன் கேட்டார்

(கொழும்பு)

இலங்கை தனது பிரச்சினைகளை தானே தீர்த்துக் கொண்டிருந்தால், வெளிநாடுகள் ஏன் தலையிடுகின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றியபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அத்துடன், சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்தும் வகையில்இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது எனவும் அவர் தனதுரையில் உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, (20ஆம் பக்கம் பார்க்க)



# போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பில் நம்பகமான நடவடிக்கை அவசியம்!

### ஜனாதிபதி மகிந்தவிடம் பான் கீ மூன் வலியுறுத்து



(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு சுயாதீனமானதும், நம்பகரமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு கண்டம் கழியவில்லை கடைசி நேரத்திலும் ஆபத்து வரலாம்

(ஜெனீவா)

ஜெனீவாவில் மனிதவுரிமைகள் பேரவையின் 18ஆவது அமர்வு இடம்பெற்று வருகிறது. இன்னும் நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்த அமர்வில் தமக்கு எதிரான பிரேரணை எதுவும் சமர்ப்பிக்கப்படாது என்று இலங்கை அரசு உறுதி செய்து கொண்டது. அமைச்சர் மகிந்த சமரசிங்க மீண்டும் ஒருமுறை ஜெனீவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமையே பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் இறுதி திகதி என்பதன் காரணமாகவே இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தது.

எனினும் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றுக்கு கனடா இறுதி நேரத்தில் முயலக் கூடும் என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டில் விசாரணை (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கொழும்பு சேவை பஸ்களுக்கு வழி அனுமதிப்பத்திரம் கட்டாயம்

### முதலாந் திகதி முதல் இறுக்கம்

(கொழும்பு)

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் வழி அனுமதிப் பத்திரம் கட்டாயம் என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத பஸ்களில் பயணிகளைப் பயணிக்க வேண்டாமெனவும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களையும் ஆசனப் பதிவு முகவர்களையும் வெள்ளவத்தைப் பொலிஸார் நேற்று சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போதே வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்ட அறிவிப்பை விடுத்துள்ளனர்.

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் பல பஸ்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு தயாரித்த ஆவணப் படத்தை பான் கீ மூன் பார்த்தாரா?

### சந்தேகம் எழுப்புகிறது இன்னர் சிற்றிபிரஸ்

(நியூயோர்க்)

சனல்4 தொலைக்காட்சி தயாரித்த இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்தை இன்னமும் பார்வையிடாத ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் அதற்கு போட்டியாக இலங்கை அரசு தயாரித்த Lies Agreed To ஆவணப் படத்தை பார்வையிட்டிருப்பதாக இன்னர் சிற்றிபிரஸ் சந்தேகம் எழுப்பியுள்ளது.

ஐ.நா. தலைமையகத்தில் நேற்றிரவு ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனை சந்தித்து விட்டு ஜனாதிபதி மகிந்த தலைமையிலான குழு வெளியேவந்தது.

பான்கீமூனைப் பற்றிச் சாதாரணமாகப் பேசியவாறே இவர்கள் சந்திப்பு அறையிலிருந்து வெளியே வந்தனர்.

அப்போது நாங்கள் அவருக்கு அனுப்பிய காணொளியை அவர் ஏற்கெனவே பார்வையிட்டுள்ளார் என்று (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெ.நீதிமன்றம் அழைப்பாணை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66வது கூட்டத்தொடரில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நியூயோர்க் மாவட்ட நீதி மன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கேணல் ரமேஷின் துணைவியார் வத்சலாதேவி நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்குத் தொடர்பிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது படைத் தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட கேணல் ரமேஷின் துணைவி வத்சலாதேவியின் சார்பில் சட்டவாளர் வி.உருத்ரகுமாரன் இவ்வழக்கை கடந்த 22ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

கேணல் ரமேஷின் படுகொலை, வன்னியில் இடம் (20ஆம் பக்கம் பார்க்க)




தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மாநாடு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெற்றபோது...

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மோசமடையும் தமிழ் மக்களின் நிலையைத் தடுக்க தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்காமல் ஒன்றுபட வேண்டும்

## கூட்டணியின் மாநாட்டில் ஆனந்தசங்கரி அழைப்பு

தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, இராணுவ அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து செயற்படுவது மேலும் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மாநாடு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் நிலை தற்போது மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இராணுவ அடக்குமுறைகளுக்கும் அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கும் தமிழ் மக்கள் உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பிரிந்து செயற்படும் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்க் கட்சிகளை இணைப்பதில் பாகுபாடு காட்டக்கூடாது.

எங்களுடைய பலத்தை நாம் அதிகரித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறமுடியும்.

இந்த அரசாங்கம் கிறீஸ் மனிதன் விவகாரத்தில் மக்கள் அவதிப்படும் நிலையில், பெண் பிள்ளைகள் பாடசாலைகளுக்கும் வெளியிடங்களுக்கும் செல்ல முடியாது அச்சப்பட்டு வீடுகளில் முடங்கிக் கிடக்கும் நிலையில், தமிழ் மக்கள் மீது இன்னுமொரு அழுத்தத்தை ஏற்படுத்த முயல்கின்றது.

தமிழ் மக்களுக்கு காணி வழங்கும் திட்டம் என்ற பெயரில் அவர்களைப் பரிசோதித்து வருகிறது.

இந்தத்திட்டத்தைக் குறிப்பிட்ட 5 பிரதேசசெயலகங்களில் மட்டும் மேற்கொண்டு வருகின்றது.



இதனை முதன்முறையாகத் தமிழர்கள் குறிப்பாக போரில் பாதிப்படைந்த தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் மட்டும் அமுல்படுத்தியுள்ளது.

எனவே தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# சிறுநீரக பாதிப்பால் உயிருக்குப் போராடும் அரசியல் கைதி உதவி கோருகிறார்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு இரத்த மாற்று சிகிச்சைக்கு உட்பட்டு உயிருக்காகப் போராடுகின்ற நிலையில் தமிழ் அரசியல் கைதி ஒருவர் உதவிக் கோரிக்கை விடுத்துள்ளார். மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ஜெகதீஸ்வரன் என்பவரே கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இவ்வாறு உயிருக்கு போராடி வருகின்றார்.

இவருக்கு தற்போது யூ பிரிவு சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் யாராவது இவருக்கு உதவி புரிந்து இவரின் உயிரைக் காப்பாற்றுமாறும் இவருடைய மனைவியும், சகோதரியும் கேட்டுள்ளனர்.

பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற யுத்தத்தில் படுகாயமடைந்து கப்பல் மூலமாக திருகோணமலை வந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இவருடைய மனைவியான ரனீதா என்பவரும் போரின் போது காயப்பட்டு ஒரு கால் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது வவுனியாவில் வசித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ந-5)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலராக வீ.ஆனந்தசங்கரி தெரிவு

## கனகராஜா கட்சியின் தலைவர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக கே. கனகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு முன்னாள் தலைவர் வீ. ஆனந்தசங்கரி செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மாநாடு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே கட்சியின் புதிய நிர்வாகிகள் அறிமுகம் இடம்பெற்றது.

இதில் கட்சியின் செயலாளராக இருந்த கே.கே. கனகராஜா புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவராக இருந்த வீ. ஆனந்தசங்கரி கட்சியின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு சிரேஷ்ட உபதலைவராக கே.எஸ். முத்துலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு நிர்வாக செயலாளராக இரா. சங்கையா, இணைப் பொருளாளராக க. பரஞ்சோதி, த. நடனேந்திரன் உபதலைவராக எஸ். மனோகரன், ஞா. கிருஷ்ணபிள்ளை, ஓ.வர்ணகுலநாதன் ஆகியோரும் இளைஞர் அணிச் செயலாளராக எஸ். சஞ்சயன், மகளிர்அணிச் செயலாளராக செல்வி சு.ராஜராஜேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு இதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் உள்ளடங்கலாக 35 பேர் நிர்வாகிகளாக தெரிவு செய்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# சர்வதேச கராத்தே போட்டியில் ஈழத் தமிழருக்கு தங்கப் பதக்கம்

அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற 22-வது சர்வதேச கராத்தேப் போட்டியில் இலங்கையரான செல்லத்துரை கணேசலிங்கம் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

பிரித்தானியாவில் வாழ்கின்ற 62 வயதான இவர் இப்போட்டியில் தன்னிலும்விட மிகவும் வயது குறைந்த போட்டியாளர்களைத் தோற்கடித்து இப்பதக்கத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவில் இன்டியானா மாநிலத்தில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியில் தான் தங்கப்பதக்கத்தை வெல்வேன் என ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை என இவர் கூறியுள்ளார்.

தனது 23ஆவது வயதில் கராத்தேக் கலையைப் பயின்ற இவர், 1990-ம் ஆண்டு தனது துணைவியாருடன் பிரித்தானியாவுக்கு இடம்பெயர்ந்தார்.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறும் வகையில் ஏதாவது சாதித்துக் காட்ட வேண்டும் என விருப்பம் கொண்டுள்ள இவர், தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருந்ததால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ந-5)

# சுட்டவரும் பலி சூடுபட்டவரும் பலி

(கொழும்பு)

அம்பாறை மஹாஓயா பிரதேசத்திலுள்ள 69ஆம் விசேட அதிரடிப்படையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைச் சுட்டுக்கொன்ற விசேட அதிரடிப் பொலிஸை சேர்ந்த பிரதம பரிசோதகரும் உயிரிழந்தார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைச் சுட்டுக் கொன்றவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். பலத்த காயமடைந்த நிலையில் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ந-5)

# வன்னி கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு விடுதி வசதி

## அடுத்த ஆண்டில் அமைக்கப்படும்

வன்னி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களின் நலன்கருதி ஒவ்வொரு வலயங்களிலும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரியர் விடுதி அமைக்கப்படுமென வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் மடு கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பஸ் சேவையில் ஏற்படும் தாமதத்தினால் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வன்னி கல்வி வலயங்கள் ஒவ்வொன்றிலும் ஆசிரியர் விடுதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்டு வருகின்றது என அமைச்சின் செயலாளர் இளங்கோவன் குறிப்பிட்டார். (ந-5)


### திசைகாட்டி

(முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
குறைந்த கட்டண விசா ஆலோசனை
இலவச சட்ட ஆலோசனை
IELTS, A1, B1, B2
ஆங்கில வகுப்புக்கள்
வறுமைக்கோட்டின் கீழ் உள்ள
மாணவர்களிற்கு இலவச சேவை.
தினமும் காலை 10 - பி.ப. 5மணி வரை
(6422)

### விற்பனைக்கு

ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் மானிப்பாய் வீதியில் 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
T.P.: 0775421730
(6414)

### உடன் தேவை

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் தினசரி பூசை செய்வதற்கு நல்லொழுக்கமுள்ள, அர்ப்பணிப்புடன் பக்திபூர்வமாக பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்ற அந்தணர் ஒருவர் தேவை. உடனடியாக ஆலயத்திற்கு முற்பகல் 11.00 மணிக்கு வரவும்.
குறிப்பு:- நவராத்திரி பூசைகள் இம்முறை நடைபெறமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
- ஆலய அறங்காவலர்
(6138)

### தேவை

பெண் எழுதுவினைஞர் தேவை. பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.
"திசைகாட்டி"
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, (EXPO விமான சேவை அலுவலகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
(6425)

### காணி/வீடு விற்பனைக்கு

- பளை, புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும்,
- பளை, கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும்,
- 56, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசல கூட வசதி, சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
0779592051
(6412)

## இன்று ஒரு தகவல்

# ஞானத் தெளிவு

ஒரு ஊரிலே ஒரு குரு இருந்தார். ஒரு நாள் அவரைத் தேடி ஒருத்தன் வந்தான்.

"உனக்கு என்ன வேண்டும்? " என்று கேட்டார் குரு.

"எனக்கு ஞானத் தெளிவு வேண்டும். அதற்கு உங்கள் உபதேசம் எனக்குத் தேவை " என்றான்.

"உபதேசம் வேண்டுமென்றால் அதைப் பெற்றுக் கொள்கிற அளவுக்கு தகுதியுள்ளவனாக உன்னைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும்! " என்றார்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் " என்றான்.

"முதலில் நீ செய்ய வேண்டியது என்னவென்றால்... உன்னிடமுள்ள எல்லா கெட்ட குணங்களையும் விட்டு ஒரு வருடம் கழித்து வா... அதன் பின்னர் பார்க்கலாம்! " என்றார்.

"அவ்வளவு தானே... சரி...! " என்று கூறினார்.

ஒரு வருடம் கடந்த நிலையில் அங்கு மீண்டும் வந்த சமயத்தில் அந்த ஆசிரமத்தின் மண்தரையை ஒரு வேலைக்காரன் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

மண் தரையிலேயிருந்து எழுந்த புழுதி அதிகமாக இருந்தது. அது காற்றிலே கலந்து... சீடனையே மறைக்கிற அளவிற்கு ஒரே புழுதி மண்டலமாக இருந்தது.

சீடனுக்குக் கோபம் வந்தது. அந்த வேலைக்காரனை அடிப்பதற்காக கையை ஓங்கிக் கொண்டு போனான்.

அவன் ஓடிப்போய் குருவிடம் சொன்னான்.

"குருவே! உங்கள் கட்டளைப்படி நான் தரையைச் சுத்தம் செய்தேன். ஆனால் அந்த ஆள் என்னை அடிக்கடி வருகிறான்! " என்றார்.

குரு அந்தச் சீடனை அழைத்தார்.

"இதோ பார்! உன்னுடைய எண்ணங்களில் பாம்புகள் புகுந்துள்ளது. அதையெல்லாம் விரட்டியடித்து விட்டு ஒரு வருடம் சென்றபின்னர் வா! " என்றார்.

சீடன் யோசித்தான் "சரி " என்று கூறிவிட்டு சென்றான்.

மீண்டும் ஒரு வருடம் கழித்து மறுபடியும் வந்தான்.

இப்போது அந்த வேலைக்காரன் என்ன செய்தான், குரு கட்டளைப்படி தரையைப் பெருக்கி, புழுதியை எடுத்து வேண்டுமென்றே அந்தச் சீடன் மேலே தூவினான்.

சீடனுக்கு மகா கோபம் வந்தது. அவன் வேலைக்காரனை திட்டினான்.

முன்புபோல் குருவிடம் ஓடினான்.

"ஐயா! அந்த ஆள் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுகிறார்! " என்றான்.

"ஓ... அப்படியா?" அப்படியென்றால், இந்தத்தடவை பாம்புகள் அல்ல... இப்போது அவன் இதயத்தினுள் நுழைந்தது நாய் என்று கூறினார்.

அதை விரட்டியடித்து விட்டு இன்னும் ஒரு வருடம் கடந்த பின்னர் வரச் சொன்னார்.

அவனும் தலையசைத்து விட்டு சென்றான்.

ஒரு வருடம் கழித்து மறுபடியும் வந்தான்.

இப்போது அவன் வரும்போது என்ன செய்ய வேண்டுமென்று அந்த வேலையாளிடம் குரு ஏற்கனவே சொல்லி வைத்தார்.

அதன் பிரகாரம் அவன் செய்ய ஆரம்பித்தான். கூட்டிப் பெருக்கி புழுதியை ஒரு வாளி தண்ணிரிலே இட்டு நன்றாகக் கலக்கி... அவன் தலையிலே ஊற்றினான்.

இவ்வளவு செய்தும் அவனுக்கு இம்முறை கோபம் வரவில்லை! அதன் பதிலாக அவனைப் பார்த்து "நன்றி " என்றார்.

எதையும் சகித்துக் கொண்டு அமைதியாக இருக்கும் குணத்தைக் கற்றுக் கொள்வதற்கு உதவியாக இருந்ததற்காக அந்த வேலைக்காரனுக்கு நன்றி.

இதைக் அறிந்தவுடனேயே அந்த குரு ஓடிவந்தார். இவனை அணைத்தார்.

"இன்றிலிருந்து நான் உனக்கு உபதேசம் செய்யலாம் அதற்கான தகுதி உனக்கு வந்துவிட்டது!" என்றார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. ஒருவரிடம் உபதேசம் கேட்கவேண்டுமென்றால், அதற்கு எமக்கு ஒரு தகுதி இருக்க வேண்டும்.

சகிப்புத்தன்மை ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை தொடர்பான கனடாவின் நிலைப்பாட்டிற்கு கனேடிய தமிழர் பேரவையினர் வரவேற்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் 18 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின்ஆணையின் பேரில் சர்வதேச நிபுணர் குழுவால் தயாரிக்கப்பெற்ற இலங்கைப் போர் மற்றும் மனித உரிமை மீறல்கள் மீதான அறிக்கையும் தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்திடம் மேல் நடவடிக்கைகளுக்காக கையளிக்கப் பெற்றுள்ளது.

இதன் பாலான ஐ.நா. வின் முயற்சிகளைகனேடியதமிழர்பேரவை வரவேற்றுள்ள அதேவேளையில் கடந்த சில தினங்களாக ஜெனீவாவிலும் கனடாவிலும் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

அண்மையில் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் தெரிவித்த இலங்கை தொடர்பான கொள்கை மாற்ற பேட்டியைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை கனடாவின் ஐ.நா. பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணையத்தின் 19 ஆவது கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் கொண்டுவருவதற்காக ஒரு தீர்மானத்தை முன்வைத்துள்ளனர். இத் தீர்மானப்படி எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடக்கவிருக்கும் மனித உரிமைகள் ஆணையத்தின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வெளியிடவுள்ள அறிக்கையையும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை எடுத்துள்ள, எடுக்கவுள்ள செயற்பாடுகளையும் சர்வதேச நாடுகள் சுயாதீன ரீதியில் உத்தியோகபூர்வமாக சம்பாசிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கனடாவின் வெளிப்பாடான இந் நடவடிக்கை ஐ. நா. சபையின் சர்வதேச நிபுணர் குழுவால் தயாரிக்கப் பெற்ற இலங்கைப் போர் மற்றும்மனித உரிமை மீறல்கள் மீதான அறிக்கையை வலுப்படுத் துவதாக இருப்பதாகவும் ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையின் மூலமே இலங்கைஅரசாங்கம்மறைந்து வரும் மனித உரிமை மீறல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள் அமைதியைப் பேண உதவும்எனவும்கனேடிய தமிழர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

மற்றும் கனேடிய தமிழர் பேரவையின் சட்ட ஆலோசகரும் கனடா சட்டவியலாளர் உரிமைகள் காப்பு நிறுவனத்தின் உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் ஆணையத்தின்கூட்டத்தொடரில், கருத்துத் தெரிவிக்கையில் கனடாவின் கொள்கை மாற்றத்தையும் பிரதமர் ஸ்டீபன் ஹாப் பரின் வெளிப்பாடான கருத்துக்களையும் வரவேற்றுள்ளார். எனினும் கடந்த புதன் கிழமை இலங்கை தொடர்பான தீர்மான முன்மொழிவை கனடா உத்தியோகபூர்வமாக மனித உரிமைகள் ஆணையத்தின் 18 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவில்லை. கனடாவின் இத் திடீர் திருப்பம் பலரையும் கேள்விக்குள்ளாக்கியு ள்ளது.

இது தற்காலிகமானதாக அல்லது ஒரு சாணக்கியத்தனமான அரசியல் நகர்வா என்பது இன்னும் சில நாட்களில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பச்சிலைப்பள்ளி கிளாலி மீள்குடியமர்வு ஒத்திவைப்பு

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி கிளாலி (கே.என்/95) மீளக்குடியமர்வு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன்படி இன்று திங்கட்கிழமை நடைபெற மாட்டாது எனவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 60 |
| தக்காளி | 60 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 30 |
| கோவா | 30 | 60 | 50 |
| கரட் | 50 | 70 | 30 |
| பூசணி | 30 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 90 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 80 | -- |
| பயற்றங்காய் | 80 | 60 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 50 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 50 | 80 | 80 |
| போஞ்சி | - | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 15 | 10 |
| தேசிக்காய் | 200 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

## இராசி பலன்

*26.09.2011*
*(புரட்டாதி 9, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*சதுர்த்தசி முன்னிரவு 7.51 மணிவரை*
*பூரம் முன்னிரவு 7.47 மணிவரை*
*இராகுகாலம் 7.32-9.02 மணிவரை*
*சுபநேரம் 12.02-1.32 மணிவரை*
*கேதாரேஸ்வர விரதம், சஸ்திரஹதமகாளயம், அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை, வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம்.*

**மேடம்** இனிமையான நாள், இல்லம்தேடி நல்ல செய்திகள் வந்து சேரும், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், அடிப் படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளமுற்படுவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், ஆச்சரியமான செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**கடகம்** உங்களின் ஆலோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கலாம், சொத்துக்கள் வாங்குவதில் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிங்கம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், குடும்பச்சுமைகள் அதிகரிக்கும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** தொழிலில் பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைவாக காணப்படும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்** பண சுணக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார், அடிப் படைத் தேவைகள் பூர்த்தியாகும், பெருமையடைய வேண்டிய நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், சேமிப்புக்கள் உயர்வடையும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** தன்னம்பிக்கையுடன் பணியாற்றி தடைகளை அகற்றும் நாள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** மகிழ்ச்சி வந்து சேர மாயவரை வழிபட வேண்டிய நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தில் வாக்கு வாதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** வாழ்க்கைத் துணைவழியே வரவு வந்து சேரலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்நாள்.

**மீனம்** உறவுபகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், காணாமல் போன பொருளொன்று கையில் கிடைக்கலாம், உடல்நலம் சீராகும்.

வளவன்

# இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்து

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியமற்ற காலவிரயத்தை ஏற்படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

அவசிய மேற்படின் பொருத்தமான சில மாற்றங்களுடன் இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வை அரசு முன்வைக்க வேண்டுமென அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தாம் ஆண்டு அனுபவிக்கும் காணிகளை பதியுமாறு கேட்பது அவசியம் தானா? என அக்கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாடு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுக்குழுவின் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வெளியிடப்பட்டது. இதனை அக்கட்சியின் முன்னாள் தலைவரும் தற்போதைய செயலாளர் நாயகமுமாகிய வீ.ஆனந்தசங்கரி மாநாட்டில் தெரிவித்தார். அவை வருமாறு,

✷தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி நிபந்தனை அற்ற ஆதரவினை கொடுத்தது. எமது ஒற்றுமையினை நிலைநாட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் சில வேட்பாளர்களை, தமிழ் மக்களின் விருப்பத்திற்கு அமைய கொடுத்து உதவினோம். உதயசூரியன் சின்னத்தில் இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெற்றிகளையும் ஈட்டிக் கொடுத்தோம். தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழர் தேசிய கூட்டமைப்போடு உள்ள உறவினை மீண்டும் வலியுறுத்தி பொது மக்களின் நன்மைக்காக ஒன்று சேர்ந்து செயற்படுவதோடு ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாதவகையில் செயற்படும்.

✷தமிழர் விடுதலைக் கூட்டணி தமது அகிம்சை கொள்கையை மீண்டும் வலியுறுத்தி சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் இசைய வைத்து சமாதான முறையில் நியாயமான தீர்வை வென்றெடுக்கும்.

✷தமிழர் விடுதலை கூட்டணி சகல இன மக்களுடனும் நல்லுறவைப் பேண திடசங்கற்பம் பூண்டுள்ளது. அதேவேளை அரசு இலங்கை வாழ்மக்கள் அனைவரையும் சமமாக நடத்தி அவர்களுடைய மறுக்கமுடியாது ஜனநாயக மனிதாபிமான உரிமைகளுடன் ஏனைய உரிமைகளையும் அனுபவிக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

✷கடந்த 30 ஆண்டிற்கு மேலாக வடகிழக்கு வாழ் மக்கள் அனுபவித்த தாங்க முடியாத துன்பங்களை குறிப்பாக யுத்தம் உச்சக்கட்டம் அடைந்த போது மேலோங்கிநின்றவன்முறையை வேறுஎந்ததுன்பசம்பவத்துடனும் ஒப்பிடமுடியாது.

சுனாமி போன்ற தேசிய இயற்கை அழிவினை நாட்டில் உள்ள அனைவரினதும் குறிப்பாக தமது சமய நம்பிக்கை கோட்பாடு ஆகியவற்றில் நம்பிக்கை வைத்திருக்கும் சிங்கள் கிராமவாசிகளில் மூத்தோரின் உள்ளத்தினை தொட்டுள்ளது என்றால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் எவ்வளவு தூரம் அவர்களை பாதித்திருக்கும் என்பதை கற்பனை கூட பண்ணிப்பார்க்க முடியாது.

எனவே ஓர் பிரச்சினையை அனுதாபத்தோடு அணுகக்கூடிய சாதாரணமான மக்களிடம் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணும் பொறுப்பினை ஜனாதிபதி கையளிக்க வேண்டும். கிராமவாசிகள் நியாயமாக சிந்திப்பர். நியாயமாகவும் நடப்பர். இதனை சர்வதேச வாக்கெடுப்பு மூலம் மக்களின் தீர்ப்புக்கு விடுவதே சிறந்தது என தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புகின்றது.

✷யுத்தம் முடிபுற்று 2 வருடங்களின் பின்பும் மீள்குடியேற்றப்பட்ட ஒரு தொகுதி மக்கள் மீளக்குடியேறி ஒருவருடம் ஆகியும் முறையாக தமது வாழ்வினை ஆரம்பிக்கவில்லை. அநேகருக்கு தமது வாழ்க்கையினைக் கொண்டு நடத்துவதற்குரிய போதிய வழிவகை இல்லை.

அநேகர் தமது உறவுகளை இழந்துள்ளனர். அத்தோடு எல்லா மக்களும் தமது உடைமைகள் அனைத்தையும், வீடுகளினையும் இழந்து உள்ளனர். ஆகவே தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் பொருத்தமான வழிமுறையில் உள்ளூர் மக்களின் பங்களிப்போடு மீளக்குடியேற்றம், புனர்நிர்மாணம் ஆகியவற்றைநீதியான முறையில் அமுல்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கின்றது.

✷நாடு பூராக மக்களிற்கு பூரண சமாதானமும் குறிப்பாக யுத்தத்தால் அழிவடைந்த வடகிழக்கு பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என தமிழர் விடுதலை கூட்டணி வேண்டுகின்றது.

வட கிழக்கில் சிலர் 18 தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். அத்தகைய நடைமுறையின் போது அவர்கள் தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து தம்வாழ்க்கையினை கொண்டு நடத்த முடியாத அளவிற்கு ஓட்டாண்டி ஆகிவிட்டனர். இந்த பரிதாபகரமான நிலையில் இவர்களின் முக்கியமான பிரச்சினை காணி சம்பந்தப்பட்டதே. தங்களுடைய காணிகளையும் தாங்கள் வாரிசாக பெற்ற காணிகளையும் இன்னும் அநேகர் அடையாளம் காணவில்லை. அநேகமான காணி சொந்தக்காரர்கள் பிறநாட்டில் வாழ்கின்றனர். அவர்களில் சிலர் பராயம் அடையாதவர்கள். அநேகர் தமது காணி உறுதிப்பத்திரங்களை இழந்துள்ளனர். இத்தகைய பல பிரச்சினைகள் மத்தியில் மக்களை தமது காணிகளை பதியுமாறு கேட்பது அவசியம் தானா? தாம் ஆண்டு அனுபவிக்கும் காணிகளையும் பதியுறுமாறு கேட்பதை தமிழர் விடுதலைக்கூட்டணி தனது கடும் ஆட்சேபனையை அரசிற்குத் தெரிவித்துக் கொள்கின்றது. அரசு காணி கொடுக்க விரும்பின் காணிப்பிரச்சினை தீரும்வரை பொறுத்திருக்கவேண்டும். இத்திட்டத்தினை நாடு பூராகவும் அமுல்படுத்துவதாக இருப்பின் அரசு அப்பணியினை இடம்பெயராது வாழ்கின்ற மாவட்டங்களில் ஆரம்பிக்கலாம். நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து அவர்களின் காணி விபரங்களினைப் பெறுவதனை அரசு உடனடியாக கைவிடவேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணி வன்மையாக வற்புறுத்தி வேண்டுகின்றது. மேலும் மரண மடைந்த பலரது காணிகள் இக்கட்டத்தில் இன்னும் கண்டறியவோ அடையாளம் காணவோ முடியவில்லை என்பதையும் நினைவில் கொள்க.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்னும் சந்தேகத்தில் பல இளைஞர், யுவதிகள் இன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அநேகர் குற்றமற்றவர்கள். அத் தகையோரை உடன் விடுதலை செய்யுமாறு அரசினை தமிழர் விடுதலைக்கூட்டணி வேண்டு கின்றது.

✷யுத்தம் மக்களுக்கும் உடைமைகளுக்கும் பல நட்டத்தினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் ஆயுதங்களைக் கண்டதும் பைத்தியம் பிடித்தது போல் காணப்படுகின்றனர். கிறிஸ்பூதங்களின் பிரசன்னமும் நடவடிக்கைகளும் நிலைமையினை மிகவும் மோசம் அடைய வைத்துள்ளது.

இவ்விடயத்தில் அரசு கடும் நடவடிக்கை எடுக்கத்தவறின் விளைவுகள் படுமோசமாகும். ஆகவே ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவையோ அன்றில் உயர்சக்திபடைத்த ஒருகுழுவினையோ நியமித்து பூரண விசாரணை நடத்த வேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணி ஜனாதிபதியினை வற்புறுத்துகின்றது.

✷தம் வீடுகளிலிருந்து விரப்பட்ட இஸ்லாமிய மக்கள் அவர்களின் வீடுகளில் மீள்குடியேற்றப்படவில்லை. தம் உடைமைகள் அனைத்தையும் கைவிட்டு சொற்ப பணத்துடனேயே சென்றனர். அவர்களுக்கு முறைப்படி நஷ்டஈடு கொடுத்து அரசே வீடுகள் அமைத்து கொடுக்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் 1983ஆம் ஆண்டு யூலைக்கலவரத்தில் நாடு தழுவி வாழ்ந்த தமிழர்கள் தம் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நாட்டைவிட்டு வெளியேறி தமிழ்நாட்டில் குடியேறினர்.

எனவே போதியளவு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் அவர்கள் மீளக்குடியேறுவதற்கு தூண்டுதலாக அது அமையும். அவர்கள் இழந்த அசைவற்ற ஆதனங்களை பிடித்து வைத்திருப்பவர்களிடமிருந்து மீட்டுக்கொடுக்க வேண்டும். அத்துடன் இடம் பெயர்ந்த மக்கள் இழந்த சொத்துக்களிற்கு நஷ்டஈடு வழங்குவதாக ஜனாதிபதி கூறியதினை நினைவூட்டி சொத்துக்களை இழந்தவர்களுக்கு அரசு நஷ்டஈட்டினை வழங்குவதோடு தம் நிலங்களை இழந்து தெற்கே சென்ற மக்களுக்கு அவர்களின் காணிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

✷இராணுவத்தினரால் யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட தங்கம் மக்களுக்கு சொந்தமானது. இத்தங்கத்தை சட்டப்படியும் தார்மீக அடிப்படையிலும் மக்களுக்கே சொந்தமாகையினால் அரசு மக்களுக்கே மீளக்கையளிக்க வேண்டும் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகின்றது.

✷மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் முன்னொருபோதுமில்லாத வகையில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். பொத்துவிலிலுள்ள அறுகம்பை தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள மயிலிட்டி வரை இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சொல்லொணா கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். மீன்பிடிப்பதற்கு மீனவர்கள் எவரிடமும் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய அவசியம் இல்லை. உள்ளூர் மீனவர்களுக்கு இத்தகைய இடையூறுகளை கொடுப்பதை வன்மையாக கண்டித்து 30 ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு சுதந்திரமாக தொழிலில் ஈடுபட்டார்களோ அவ்வாறே அவர்களை விட்டுவிடும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வலியுறுத்துகின்றது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களையும் இராணுவத்தினரையும் அகற்றும் படியும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வற்புறுத்துகின்றது.

கடந்த காலத்து மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு திரும்பிவிட்டோம் என மக்கள் எண்ண வேண்டுமே ஒழிய வேறு சிலரின் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டு விட்டோம் என்றல்ல. நாட்டிற்கு சுமூக வாழ்வை மீள கொண்டுவர அரசுக்குள்ள ஒரேயோரு வழி இது மட்டுமே. 200000க்கும் மேற்பட்ட மக்களின் உயிர்களையும் பல கோடிகள் பெறுமதியான சொத்துக்கயையும் இழந்தும் இனப்பிரச்சினை தீர்வுக்கு அவசியமற்ற காலவிரயத்தை ஏற்படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அதிருப்தியை தெரிவிக்கின்றது. அவசியமேற்படின் பொருத்தமான சில மாற்றங்களுடன் இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வை அரசு முன்வைக்க வேண்டுமென நாம் அரசை வற்புறுத்துகின்றோம்.

✷இந்திய முறையிலான ஆட்சிக்கு இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையினர் உடன்பாடானவர்கள் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீர்க்கமான அபிப்பிராயமாகும்.

✷இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஒற்றையாட்சி முறையில் அமையுமானால் சமாதானமோ அல்லது நிரந்தர தீர்வோ ஒருபோதும் ஏற்படாது என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் திடமான எண்ணக்கருவாகும்.

✷மக்கள் தம் உறவுகளை எண்ணி துயருறும் தாமே இன்னமும் முறையாக வாழ்வை ஆரம்பிக்காத நிலையில் பிறரை அவர்கள் மத்தியில் குடியிருக்க வைப்பது எதிர்பார்ப்புக்கு முரணாக அமையும் என்ற பாடத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுக்கு புகுத்துகின்றது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-6)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழா நேற்றுக்காலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா மங்கல விளக்கேற்றுவதையும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- கரவெட்டிச் செய்தியாளர்)*

# சரணாலயங்களுக்கான பாதுகாப்பு கடமைகளில் இராணுவத்தினர்

தேசிய வன விலங்குகள் சரணாலயங்களுக்கான பாதுகாப்பு கடமைகளில் 400 சிவில்பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்து.

வன விலங்குகள் வேட்டையாடப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதே இதன் நோக்கம் என வன விலங்குகள் ஜீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் எச்.டீ.ரத்நாயக்க கூறியுள்ளார்.

காட்டு யானைகளின் தொல்லையால் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கும் பகுதிகளிலுள்ள மின்வேலிகளின் பராமரிப்பு பணிகளிலும் சிவில் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து சிவில் பாதுகாப்பு படையினர் கடமைகளை மேற்கொள்வார்கள் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## தோச நிவர்த்தி பூஜை

யாழ்.வண.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புரட்டாதி சனீஸ்வர விரதத்தை முன்னிட்டு சனீஸ்வர தோச நிவர்த்தி பூஜை கடந்த சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிவரை பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 4.30 மணி க்கு நடைபெறவுள்ளது.

இதில் மூலமூர்த்திக்கும் சனீஸ்வரனிற்கும் அபிஷேகங்கள் இடம்பெற்று தொடர்ந்து விசேட பூஜைகளும் நடைபெறும். (4-2-12)

# யாழ். சிறையில் கைதியொருவருக்கு நேற்றைய தினம் திருமணப்பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதியொருவருக்கு நேற்றையதினம் திருமணப்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவருக்கே இவ்வாறு திருமணப்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவர் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது வட்டுவாகல் பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

திருமணப்பதிவு பத்திரம் இல்லாததன் காரணமாக தனது மகளை பாடசாலையில் இணைப்பதற்கு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கும் சிறைச்சாலை ஆணையாளருக்கும், குறித்த நபர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் நேற்றைய தினம் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏகநாயக்க முன்னிலையில் யாழ்ப்பாண திருமணப் பதிவாளர் திருமதி சிவகுமார் இந்திரா தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெகன் என்பவருக்கும் அவரது மனைவி ரேணுகாதேவிக்கும் திருமணப்பதிவு இடம்பெற்றது. (ஸ்ரீ-6)

## கண்ணீர் அஞ்சலி



### யோகநாதன் கோபாலநாதன் (நரேஸ்)

அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து பெருந்துயரடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*உன்முகம் காண எண்ணியிருந்தோம்!*
*உண்மை அறிந்து பதறித்துடித்தோம்!*
*கண்ணில் நீர் வழிந்தோட கதறுகிறோம்!*
*உண்மை அன்பின் அடையாளம்-தம்பியே*
*உன்னை இனி என்று காண்போம்*
*தேம்புகின்றோம் தேற்றுவார் யாருமின்றி....*

அக்கா-யாழினி
ஏழாலை.

(ஸ்ரீ-4551)

# மன்னார் மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை தொடர்கிறது

(மன்னார்)

மன்னாரில் மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துப் பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் அது இன்னமும் தொடர்வதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்திலிருந்து கடலுக்குச் செல்லும் அனைத்து மீன்பிடித் துறைமுகங்களுக்கு அருகிலும் கடற்படையினரின் சோதனைச் சாவடிகள் உள்ளன.

இவற்றினூடாகவே பாஸ் வழங்கப்பட்டு மீனவர்கள் தொழிலுக்குச் செல்லுகின்றனர். பாஸ் நடைமுறையால் மீனவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைப்பதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் மீனவர்கள் இதனை மறுக்கின்றனர்.

பாஸ் பெறுவதிலுள்ள நெருக்குவாரத்தால் பல மீனவக் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்வளம் அதிகம் கொண்ட மன்னார் கடலில் தாம் மீன்பிடிப்பதற்குப் பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால் வறுமையில் வாட வேண்டிய அவலநிலை தொடர்வதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை கடந்தவாரம் மன்னாருக்கும் வருகைதந்த கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பள்ளிமுனைக் கிராமத்துக்குச் சென்றபோது பாஸ் நடைமுறைப் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது உரிய தரப்புடன் கதைத்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

ஆனால் இது தொடர்பாக எவ்வித பதிலும் தமக்குக் கிடைக்கவில்லையென மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் திருமதி
## செல்லையா பற்குணதேவி

(கொம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும், தையிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கல்லுவத்தினை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

**மண்ணில்** 13.05.1945

**விண்ணில்** 28.08.2011



*கனத்த இருளினிலே*
*கங்கை கரையருகே*
*காலன் அணைத்தானோ? இல்லை....*
*காலமெல்லாம் கைதொழும்*
*கணபதிதான் அழைத்தானோ?*
*கனத்து சுமக்கும் இதயங்கள்*
*கரைந்து கேட்கும் கேள்வி இது*
*இதயத்துடிப்பு அடங்கினாலும்*
*எம் உறவு துடிப்பகலாதுன்னை*
*அரவணைத்து கெஞ்சுதம்மா!*
*மீண்டும் வருவாய் எம் குலத்தில்*
*விரும்பி எம்மை காத்திடவே*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்வுகளிலும் தங்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோவிலடி,
கரணவாய் மேற்கு, கல்லுவம்.

செல்லையா (கணவர்),
பிள்ளைகள்.

(ஸ்ரீ-4550)

# கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பம்

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. குறிப்பாக செபமாலை அன்னை ஆலயத்தின் நற்கருணை பெருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட அருட் தந்தை யூட் குறூஸ், பங்குத் தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகள் ஆகியோர் இணைந்து நற்கருணை விழாவினை சிறப்பித்தனர்.

கொழும்புத்துறை வீதியிலும் சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை, இரண்டாம் ஒழுங்கை, ஏ.வி. வீதி ஆகிய பகுதிகளில் உள்ள அன்பியங்களால் பிரத்தியேகமான பலிபீடங்கள் அமைக்கப்பட்டுள்ள நற்கருணைப்பவணியாக எடுத்து வரப்பட்டது. நிறைவில் ஆலயத்தில் மாபெரும் குணமாக்கல் வழிபாடும் நடைபெற்றது. (ஸ்ரீ-4-51)

# சாதாரணதர மாணவர்களுக்கு தொடர் கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சமூகம், யாழ். கல்வி வலய ஆதரவுடன் நடாத்தும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கல்விக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கணித பாடக் கருத்தரங்கும், வைத்தீஸ்வரா கல்லூரியில் விஞ்ஞானபாடக் கருத்தரங்கும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் கணிதபாட கருத்தரங்கும், செங்குந்தா வித்தியாலயத்தில் விஞ்ஞா பாட கருத்தரங்கும் நடைபெறும்.

கருத்தரங்குகள் அனைத்தும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். (ஸ்ரீ-4)

# கிரிக்கெட் சுற்று போட்டிகள்

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இதில் முதல் போட்டியாக அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் அதனைத் தொடர்ந்து 11பேர் கொண்ட 16 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது . (ஸ்ரீ-4-24)

# காணி பயன்பாட்டு குழுக் கூட்டம்

கோப்பாய் பிரதேசமட்ட காணி பயன்பாட்டுக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள், விவசாய பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், காணி உத்தியோகத்தர், பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-4-134)

# கடற்தொழிலாளர்களின் படகும் வெளியிணைப்பு இயந்திரங்களும் மாயம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம சேவையாளர் பிரிவில் கடற்தொழிலில் ஈடுபட்டு பின்னர் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணாடி நூல்இழை படகு ஒன்றும் இதற்குரிய வெளியிணைப்பு ஜமகா இயந்திரம் மூன்றும் காணாமல் போயுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் சனிக்கிழமை கடற்தொழிலாளர்கள் தொழிலுக்கும் சென்று வந்து தரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த படகு ஒன்றும் ஜமகா 9.9 வெளியிணைப்பு இயந்திரம் இரண்டும் ஜமகா 15 எச்.பி. ஹோஸ்பவர் வெளியிணைப்பு இயந்திரம் ஒன்றும் காணாமல் போயுள்ளதாக கடற்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின் பின்னர் இப்பகுதி மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பின்னர் தமது சொந்த முயற்சியில் இப்படகையும் இயந்திரத்தையும் வாங்கியதாகவும் இப்பொருட்களை களவு கொடுத்த உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதில் திருட்டுப்போன ஜமகா 9.9 வெளியிணைப்பு இயந்திரம் வெற்றிலைக் கேணி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளியான பாலச்சந்திரலிங்கம் செல்வரூபன் என்பவருக்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பாசிக் நிறுவனத்தினரால் கடனடிப் படையில் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-64)

# தேசிய கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை பிரதேச கலை இலக்கிய விழாவினையொட்டி நடத்தப்பட்ட பிரதேச கலை, இலக்கிய போட்டிகளின் முடிவுகள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி–கனிஷ்டபிரிவு**

செ.மதுரா (யா/புனித மரியாள் றோ.க.ம.வி. ஊர்காவற்றுறை), வி.மிரோஜா (யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி, வா.கிருஷாந்தினி (யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி

**கட்டுரைப்போட்டி–சிரேஷ்டபிரிவு**

யோ.துயித்திரா (யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி

**கவிதைப்போட்டி–கனிஷ்டபிரிவு**

வ.மதுஷா(யா/புனித மரியாள் றோ.க.ம.வி. ஊர்காவற்றுறை), ச.கிருஸ்ணநிலோஜன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை),தே.இன்பென்றாஎலஸ்ற (யா/புனித மரியாள் றோ.க.ம.வி. ஊர் காவற்றுறை),

**கவிதைப்போட்டி–சிரேஷ்டபிரிவு**

றெ.ஆன்டினோஜா (யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி,சு.நொயிலின் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), யூ.மேரிறொயன்டா (யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி

**கவிதைபாடும் போட்டி–கனிஷ்டபிரிவு**

அ.டன்ஸ்ரன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை),ஜெ.பிரதீகா (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

**கவிதைபாடும் போட்டி–சிரேஷ்டபிரிவு**

சு.நொயிலின் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

**சிறுவர் கதையாக்கம்–கனிஷ்டபிரிவு**

அ.டன்ஸ்ரன்(யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), அ.மெல்வினஸ் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), வி.துளசிகரன்(யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

**கையெழுத்துப்போட்டி–கனிஷ்டபிரிவு**

அ.அல்பிரட்நிமல்ஷன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), ச.நிவேன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை),

**பாடலாக்கம்–திறந்தபிரிவு**

கீ.கியோமார் (3 ஆம் வட்டாரம், எழுவைதீவு)

**சிறுகதை–திறந்தபிரிவு**

நா.தயாளன் (காளிகோவிலடி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை), ம.ஆனல்ட்சரண்ஷன் (கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை). (ஸ்ரீ-12)

# நல்லூர் கோட்ட திருக்குறள் மனனப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம்–1**

கௌ.மகினினி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), த.தனீஸ் (நல்லூர் சென்பெனடிக்),க.ஜனீதன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), இ.மயூரிக்கா (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை),சி.பகிஷன் (கோண்டாவில் இந்து.ம.வி),நி.கவிநயா (நல்லூர் ஸ்தான சி.சி)

**தரம்–02**

த.சோபியா (சென்பெனடிக் வித்தியாலயம்), உ.கஜிதா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), வி.நித்தியரூபசர்மா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), நா. அபிசா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை), இ.பிரணவி (யா/செட்டித்தெரு மெ.மி.த.)

**தரம்–03**

யோ. சாரணி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), தூ.துசாயினி (சென் பெனடிக் வித்தியாலயம் ), பு.மகிசனா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), மு. நிவேதனா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), த. கிருசி[illegible] (கொக்குவில் இராமகிருஷ்ண ம. வித்தியாலயம்)


**தரம் 04**

ச.புங்கவி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ந.திவ்வியா (கொக்குவில் இந்து மகளிர் ஆ.பாடசாலை), தே.வானுஜன் (யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை), ச.சாளினி (கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வித்தியாலயம்), ந.கீர்த்தனன் (சென்பெனடிக் வித்தி,

**தரம் 05**

ம.தர்மிகா (கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வித்தியாலயம்), க.துஷந்திக்கா (கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை), செ.தாட்சாயினி (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ப.பவதாரணன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சு.மனோஜிகா (யாழ். கொக்குவில் ஸ்தான சி.சி) (ஸ்ரீ)






தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மாநாடு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உரையாற்றுவதையும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தலைவர் ஆனந்தசங்கரியினால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# கோம்பாவிலில் மீள்குடியமர்வதன் மூலம் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலை ஏற்படும்

## இடம்பெயர்ந்த மக்கள் அச்சம்

(கொழும்பு)

வவுனியா, மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள வன்னி மக்களை நிர்ப்பந்தித்தே கோம்பாவில் கிராமத்தில் மீள்குடியமர்வு எனும் பேரில் தங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள மக்கள் சுயவிருப்பிலேயே கோம்பாவிலில் குடியமர்வதைக் காண்பித்துக் கொள்ள பலதரப்புகளும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது சமூகப் பிரமுகர்கள் பலரும் கூறுகின்றனர். குறிப்பாக அகதிகள் நலனில் அக்கறை காட்ட வேண்டிய ஐ.நா. உதவி அமைப்பு அதிகாரிகள் கூட இந்த நடவடிக்கைகளில் இணைந்து கொண்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வன்னியின் இறுதி யுத்தக் களங்களான முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர்மடம், ஆனந்தபுரம், அம்பலவன் பொக்கணை மற்றும் புதுக்கடியிருப்பின் சில பகுதிகளில் மீள் குடியமர்விற்கான அனுமதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டே வருகின்றது.

இப்பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயங்களாகலாமென எதிர்பார்க்கப்படும் நிலையில், மீள்குடியமர்வு தொடர்பான நம்பிக்கையீனமே நிலவுகின்றது.

இந்நிலையிலேயே அவசர அவசரமாக மெனிக்பாம் முகாமை மூடிவிட ஆர்வம் காட்டும் அரசு அங்கு தங்கியுள்ள குடும்பங்களை கோம்பாவில் கிராமத்தில் குடியமர்த்திவிட முனைப்புக் காட்டி வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்திருந்த மக்களில் 91 ஆயிரம் பேர் குடியமர்த்தப்பட்டு விட்டதாகவும், 37 ஆயிரம் பேர் குடியமர்த்தப்பட வேண்டியிருப்பதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் கூறுகின்றார்.

மீளக் குடியமர்த்தப்பட வேண்டிய குடும்பங்களில் முகாமிலுள்ள 2 ஆயிரத்து 316 குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு கோம்பாவிலில் வீடுகள் அமைத்து வழங்க ஏற்பாடாகியுள்ளது. குடும்பமொன்றிற்கு கால் ஏக்கர் எனும் அளவில் இதற்கென 600 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கோம்பாவிலில் குடியமர்வதன்மூலம் தமது பூர்வீக இடங்களுக்குச் செல்வது என்பது எப்போதும் நடக்கப் போவதில்லையென்பதை மெனிக்பாம் முகாமில் எஞ்சியுள்ள குடும்பங்கள் உணர்ந்தேயுள்ளன.

ஆனால் அக் காரணத்திற்காக கோம்பாவிலில் குடியமர்வது எந்தச் சந்தர்ப்பத்திலும் சொந்த இடத்துக்கு திரும்ப முடியாத சூழலை ஏற்படுத்திவிடுமென அவர்கள் நம்புகின்றனர். இதனாலேயே கோம்பாவிலில் மீளக்குடியேறிய இடம்பெயர்ந்த மக்கள் பின்னடித்து வருகின்றனர்.

எமக்காக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி வழங்குவதாக ஐ.நா. உதவி அமைப்பின் அதிகாரிகள் கூறுகின்றனர். படை அதிகாரிகளும் செயலக அதிகாரிகளும் கோம்பாவிலுக்கு வராவிட்டால் அநாதரவாக விட்டுவிடுவோமென அச்சுறுத்துகிறார்கள்.

உலர் உணவு நிவாரணங்களை நம்பியே அம் மக்களது வாழ்வு உள்ள போதும், கோம்பாவிலும் மெனிக்பாம் முகாமும் படையினரதும் கட்டுப்பாட்டின் கீழே இருக்கப் போகின்றதென்பதையும் அவர்கள் உணர்ந்தேயுள்ளனர். (ஸ்ரீ-2)

## நளினி-முருகன் சந்திப்பு

(வேலூர்)

வேலூர் சிறையில் நளினி -முருகன் சந்திப்பு நடைபெற்றது. இவர்கள் இருவரும் 15 நாட்களுக்கு ஒருமுறை சிறையில் சந்தித்துப் பேச சிறைத்துறையினர் அளித்த அனுமதியின்படி பொலிஸ் பாதுகாப்புடன் முருகன் பெண்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிறை அதிகாரிகள் முன்னிலையில் இவர்களது சந்திப்பு நேற்று முன்தினம் நடந்தது.

உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனையை ஒத்திவைத்த எட்டு வாரகாலம் முடிய குறைந்த நாட்களே உள்ளதாக கண்ணீர் வடித்த முருகனை நளினி சமாதானம் செய்ததாக சிறைக் காவலர்கள் தெரிவித்தனர். முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும் இதே வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அவரது மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

## சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் கைது


(கொழும்பு)

சுற்றுலா நுழைவு அனுமதி பெற்ற நிலையில் இலங்கை வந்த இந்தியர்கள் இருவர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி போரதீவு பிரதேசத்தில் துணி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்ட போது இவர்கள் வசம் ஆடைகள் உட்பட பல்வேறு துணி வகைகளும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## பூமியை நோக்கி வரும் மற்றொரு செயற்கைக்கோள்



பூமியை நோக்கி வரும் மற்றொரு செயற்கைகோள் இன்னும் 5 வாரத்தில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 1991 ஆம் ஆண்டு காற்று மண்டல ஆராய்ச்சிக்காகவும் புவியியல் ஆய்வுக்காகவும் அமெரிக்காவில் இருந்து 6 தொன் செயற்கைகோள் அனுப்பப்பட்டது. அந்த செயற்கைகோள் 14 ஆண்டு பணி முடிந்ததும் கடந்த 2005 ஆம் ஆண்டு செயல் இழந்தது.

விண்வெளியில் செயலற்ற நிலையில் இருந்த அந்த செயற்கைக்கோள் மெல்ல மெல்ல நகர்ந்து பூமியை நெருங்கியது. 200 துண்டுகளாக உடைந்து சிதறிய அதன் 500 கிலோ பகுதி சிதறல் நேற்று முன்தினம் கனடாவில் ஒகோடோக்ஸ் என்ற இடத்தில் விழுந்தது. இது பூமியில் விழுந்த போது மிகுந்த சேதத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதிர்ஷ்டவசமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் தற்போது மீண்டும் செயலிழந்த மற்றொரு செயற்கைக்கோள் பூமியை நோக்கி வருகிறது. அது ஜேர்மனியால் விண்ணில் அனுப்பப்பட்டது. ரொசாத் என அழைக்கப்படும் இந்த செயற்கைக்கோள் கடந்த 1999 ஆம் ஆண்டிலேயே செயல் இழந்து விட்டது. கடந்த 12 ஆண்டுகளாக இது விண்ணில் இருந்து படிப்படியாக நகர்ந்து பூமியை நோக்கி வருகிறது. 2 முதல் 4 தொன் எடையுள்ள அந்த செயற்கைக்கோள் பூமியை நெருங்கி விட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, அது இன்னும் 5 வாரத்தில் பூமியில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது. பூமியை நெருங்கும் போது தூள் தூளாக நொறுங்கி வெப்பத்தில் எரிந்து முழுவதும் சாம்பலாகிவிடும். ஆகவே, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## சீமெந்து தரப்பரிசோதனை அறிக்கையை அடுத்த மாதம் வெளியிட நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு சந்தையில் உள்ள சீமெந்தின் மாதிரிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தரப்பரிசோதனையின் அறிக்கையை அடுத்த மாதமளவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சந்தையில் விற்பனை செய்யப்படும் சீமெந்துக்களின் தரத்தை பரிசோதனை செய்வதற்காக அவற்றின் மாதிரிகள் வெளிநாடு ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சந்தையிலிருந்து பெறப்பட்ட சீமெந்து மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நாடு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பில் தகவல்கள் வெளியிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சீமெந்து மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்ட நிறுவனம் பரிசோதனைகளுக்காக 28 நாட்கள் கால அவகாசம் கோரியுள்ளது.

இதன் பிரகாரம் அடுத்தமாதம் முற்பகுதியில் சீமெந்தின் தரம் தொடர்பான அறிக்கை தமக்கு கிடைக்கும் என நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



மஹிந்த சிந்தனையின் கீழ் வவுனியா மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனசெவன வீட்டு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்பு திட்டத்திற் கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று முன்தினம் வேப்பம் குளத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் பி.எம்.எஸ் சார்ள்ஸ் ஆகியோர் இணைந்து அடிக்கல் நாட்டி வைப்பதை படத்தில் காணலாம்.

## மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள கசப்புணர்வை நீக்குவதற்கே முன்னுரிமை

### ஐ.நா.வில் ஜனாதிபதி தெரிவிப்பு


(கொழும்பு)


இலங்கை மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள கசப்புணர்வை நீக்குவதற்கே அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் 66 ஆவது அமர்வில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளால் அழிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் உட்கட்டமைப்புகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மாறாக இராணுவத்தினருக்கு எதிராக பிரசாரங்கள் இடம்பெறுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் தற்போது குறைந்த அளவிலான இராணுவத்தினரே கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் கடந்த 30 மாதங்களில் 669 தமிழ் பொலிஸார் வட பகுதிக்காக இணைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தனது உரையின் போது சுட்டிக்காட்டினார்.

இதன் படி இலங்கையில் ஆயிரத்து 143 தமிழ் பொலிஸார் தற்போது கடமையில் முழுமையாக ஈடுபட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஸ்ரீ)





செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் அமுதசுரபி அன்னதான சபையின் 50 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அமுதசுரபி நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் மகேசன் தலைமையுரையாற்றுவதையும் கல்விக் காருண்யனும் தொழிலதிபருமான ஈ.எஸ்.பி. நாகரத்தினம் நூலின் முதற்பிரதி பெறுவதையும் படங்களில் காணலாம்.

## இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

வல்வெட்டி கழுகு விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான இருபதுக்கு இருபது கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரையிறுதியாட்டமும் இறுதியாட்டமும் நடைபெறவுள்ளது.

இதில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி அணியும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ஸ்ரீ-4-24)

## பொது நூலகத் திறப்பு விழா

பொலிகண்டி கலை இலக்கிய மன்றத்தின் பொதுநூலகத் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொலிகண்டி ஆலடி ஒழுங்கையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதற்கான கட்டடத்தில் கலை இலக்கிய மன்றத் தலைவர் சோ.நிதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொலிகண்டி கந்தவன தேவஸ்தான ஆதீனகர்த்தா செவாலியர் திருமதி சிவயோகநாயகி இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி சே. செல்வசுகுணா, கிராம உத்தியோகத்தர்களான எஸ்.வசந்தகுமார், சி.சிவபாலசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இத்திறப்புவிழாவில் சிவப்பிரம்மஸ்ரீ குமார குருமணி ச.வைத்தியநாதக்குருக்கள்,வணபிதா அ.அகஸ்ரீன் ஆகியோரின் ஆசியுரையும் கலை இலக்கிய போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-4-48)

# இலங்கையின் 60 வீதமான உற்பத்திப் பண்டங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோ. நாடுகளுக்கே ஏற்றுமதி

(கொழும்பு)

இலங்கையின் 60 வீதமான உற்பத்திப் பண்டங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதாக கொள்கை கற்கை நிறுவனத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணரும் சிந்தனையாளருமான அனுஷ்கா விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உலகப் பொருளாதார ஈர்ப்பு மையமாக இப்போது கிழக்கு நாடுகளே விளங்கி வருகின்றன. இது ஆசிய நூற்றாண்டு ஆகும். மேற்கத்தேய ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பொருளாதாரம் காலம் கடந்தாகிவிட்டது.

எனினும் அமெரிக்கர்களுக்கு இயற்கையாக அமையப் பெற்றுள்ள சக்திகளைக் கொண்டு புதிய இளைஞர் சிரமப்படையொன்றை உருவாக்கிக் கொள்ள சாத்தியமுள்ளதாகையால் அவர்களுடைய பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுவிட்டதெனத் தீர்மானிப்பதற்கு இன்னும் காலமிருக்கின்றது.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே இலங்கை உற்பத்திகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி உற்பத்திகள் செய்யப்படுவதாக தெரிவித்துள்ள அனுஷ்கா விஜயசிங்க இலங்கையின் இனமுறுகல் தொடர்பிலான மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் அந்நாடுகளுடனான பொருளாதார உறவுகளைப் பாதித்துவிடக் கூடாதெனவும் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் முப்பதாண்டு கால யுத்தம் 2009 இல் முடிவுற்ற போதும் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என மேற்கத்தேய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மேற்படி காரணங்களால் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த பொருட்களுக்கு தீர்வை விலக்களிக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச்சலுகையை வழங்க ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே மறுத்துள்ளது.

உதவி முதலீடு மற்றும் அரசியல் ஆதரவைப் பெறுவதற்காக இலங்கை ஏற்கனவே சீனா, ரஷ்யா, ஈரான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை நாடியுள்ளது. இந்தியாவுடனான பொருளாதார உறவுகள் நெருக்கமடைய வேண்டும் . இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வீதி விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் அறுவர் பலி

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பாரிய அளவிலான வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக நாடாளுமன்ற தெரிவிக்குழு தெரிவித்துள்ளது. இதற்கமைய வருடம் ஒன்றிற்கு 2 ஆயிரத்து 300 வீதி விபத்துக்கள் இடம்பெறுவது டன் நாளொன்றுக்கு சராசரியாக 6 பேர் பலியாவதாகவும் தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன. நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுவதற்கு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதே முக்கிய காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெரிய பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளுடன் தெரிவுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆராய்ந்து பார்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏனெனில் தற்போது வீதி விபத்துக்களை 50 சத வீதிமாக குறைக்க இந்த நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றி அளித்துள்ளதாலே என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாடுகளின் செயற்பாடுகளை இலங்கையிலும் மேற்கொள்வது குறித்து ஆராயப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான சிரேஷ்ட அமைச்சர் பீ. தயாரத்ன உள்ளிட்ட குழுவினர் இன்று பெரிய பிரித்தானியாவிற்கு பயணிக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்திலான நிகழ்வுகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்திலான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முக்கிய நிகழ்வு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 100 சிறார்கள் விசேடமாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அமைச்சுக்களின் செயலாளர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய நிகழ்வில் சிறுவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இன்று முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை சிறுவர்களுக்கான திரைப்பட விழா ஒன்று கொழும்பு தரங்கணி திரையரங்கில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மந்தபுத்தி மற்றும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான பாடசாலைகளையும் புனர்வாழ்வு நிலையங்களையும் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்களுக்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு டோஹா, கட்டார் அரசாங்கத்தின் ஷா அல்லா சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளது.

தற்போது நியூயோர்க்கில் உள்ள ஜனாதி பதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ அந்த நிறுவனத்தின் தலைவர் அலிபின் அலியை சந்தித்த போதே இதற்கான இணக்கம் ஏற் பட்டுள்ளது.

இந்த நிறுவனம் சர்வதேச ரீதியாக மந்தபுத்தியுள்ள மற்றும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இது தவிர மந்தபுத்தியுள்ள மற்றும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக டோஹா, கட்டாரில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச மாநாட்டில் விசேட அதிதியாக கலந்து கொள்ளுமாறு ஷிராந்தி ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலையில் 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**ர.நிவேதா (163 புள்ளிகள்)**

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

**செ.அனுராஜ்- 143**
**சி.ருஷானுஜா-141**
**க.சுஜிந்தன்-130**
**ஜெ.ரஜிதரன்-127**
**சி.தஜீபா-117**
**ச.சஞ்சீவன்-112**
**சி.சிவலா-107**

ஆகியோரையும் கற்பித்த வகுப்பாசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



அதிபர்.
ஆசிரியர்கள்.
யா/கரவெட்டி கிழக்கு அ.த.க.
பாடசாலை

(6408)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



ஆன்மீகம் 52

விவசாயம் என்பது ஒரு தொழிலல்ல அனைவர் வீட்டிலும் ஒரு தாய் இருக்கிறாள். தாயாய் இருப்பது தொழிலல்ல. அதேபோல் விவசாயியாக இருப்பதும் தொழிலல்ல. தாய் நமக்கு சிறிய உடலைத் தந்தாள். இப்போது இருக்கிற இத்தனை பெரிய உடல் யார் கொடுத்தது நமக்கு? நாம் உண்ணும் உணவுதானே! விவசாயி அளித்த செயல்தானே உடலாய் இருக்கிறது. தாய்கொடுத்த சிறிய உடலுக்கு பத்துமடங்கு வளர்ச்சயை விவசாயி தான் கொடுத்திருக்கிறார். மனிதனுடைய வாழ்க்கையின் மிக அடிப்படைச் செயலான விவசாயத்தற்கு அளிக்கவேண்டிய மதிப்பைக் கொடுக்காமல் சமூகத்தை நடத்த முயற்சி செய்தால், அது நிச்சயமாக சமூகத்திற்கு ஒரு குறையாக மட்டுமல்லாமல், சமூகத்தின் நாசத்திற்கே அடிக்கல் நாட்டுவது போல் ஆகிவிடும். இதுபோன்ற நிலை சுமார் ஐம்பது ஆண்டுகளாக இருந்து வருகிறது என்று எம்மால் சொல்ல முடியும்.

## விவசாயத்திற்கு மதிப்பளிக்காது அதிகாரத்தைக் கையிலெடுப்பது சமூகத்தின் நாசத்திற்கே அடிக்கல் நாட்டுவது போன்றது



முன்பெல்லாம் விவசாயம் செய்கிறோம் என்றால் அது மிகவும் பெருமைப்படத்தக்கதாக, உயர்வானதாக இருந்தது. இப்போது எந்த வேலைக்கும் போகமுடியாதவர்கள் தான் விவசாயம் செய்கிறார்கள் என்றாகிவிட்டது. சிறிது திறமை இருந்தால் நகரத்திற்குப் போய்விட வேண்டும். இன்னும் சிறிது திறமை வளர்த்துக் கொண்டால் வெளிநாட்டிற்குப் போய்விடலாம். எந்தத் திறமையும் இல்லையென்றால் கிராமத்தில் இருக்கவேண்டும் என்கிற மனப்பான்மை நம்மிடம் இருந்தால் சமூகம் நன்மை பெறுவதற்கான வாய்ப்புக்களே இல்லையென்று ஆகிவிடும். இது போன்ற சூழ்நிலை வருவதற்கு நிச்சயமாக பலகரணங்கள் இருக்கின்றன.

விவசாயத்திற்கு நான் புதியவனல்ல ஏறக்குறைய ஆறரை வருடங்கள் நான் தொழிளார்களோடு ஒரு தோட்டத்தில் எட்டு மணி நேரம் வேலை செய்து அங்கேயே வாழ்ந்திருக்கிறேன். எனது வாழ்க்கையின் மிக முக்கியீமான நல்ல அனுபவம் என்னவென்றால் நான் அந்தத் தோட்டத்தில் இருக்கும்போது கிணறு வெட்ட வேண்டிய தேவை வந்தது. அந்தநிலத்தில் எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்க்கிற தன்மை என்னிடம் இருந்ததால் கிணறு வெட்ட ஓர் இடத்தைத் தேர்வு செய்தேன். எல்லோரும் இங்கே தண்ணீர் வராது பள்ளத்தில் கிணறு தோண்ட வேண்டும் என்று சொன்னார்கள். நானோ இல்லை மேட்டில் தான் கிணறு வெட்ட வேண்டும் என்று முடிவு செய்தேன். கர்நாடகாவில் உள்ள ஹகடதேவ் மாவட்டத்தில் கிணறு வெட்டத்தெரிந்தவர் அதிகம் இல்லை. எனவே நானே இந்தக் கிணற்றை வெட்டலாம் என்று முடிவு செய்து பத்துப்பணியாட்களை அமர்த்தினேன். கிணற்றுக்கு வெடி எப்படி வைப்பது என்பதை கற்றுக்கொண்டு வந்தேன். நானே வெடிவைத்தேன். கிணறு தோண்ட ஏழுமாதம் கடப்பாரையோடு வேலை செய்தேன். 18 அடி வெட்டும்போதே கிணற்றில் தண்ணீர் வந்து விட்டது. அதற்குமேல் 35 அடிவரை தோண்டினோம். அதற்கு மேல் வெட்ட முடியவில்லை நிறையத்தண்ணீர் வந்துவிட்டது. 20,25 ஆட்கள் என்னுடன் வேலை பார்த்தார்கள். 25 அடி ஆழத்தில் கிணற்றுக்குள்ளேயே ஏழுமாதம் அவர்களோடு இருந்த அனுபவத்தை என்னால் மறக்க முடியாது.

அப்போது அந்தப்பகுதியில் விவசாயிகள் யாரும் அதிகமாக கிணறுகள் வெட்டவில்லை. மழை வந்தால் பயிரிடுவார்கள். மழையில்லையென்றால் விவசாயம் இல்லை. ஓர் ஆண்டு நன்றாக இருக்கிறது. அடுத்த ஆண்டு எப்படியிருக்குமோ என்கிற போராட்டத்தில் இருந்தார்கள். அதுமட்டுமல்ல எல்லோருக்கும் 2 ஏக்கர் 4ஏக்கர் அவ்வளவுதான் நிலம். 4ஏக்கர் நிலம் இருந்தால், ஐந்து அண்ணன் தம்பிகள் ஆளுக்கு 3/4 ஏக்கர். இதில் யார் என்ன பயிரிட்டாலும். யாருக்கும் வாய்க்கே போதாது என்பது போல்தான் (வயிற்றுக்கல்ல) அவ்வளவு உணவு தான் அவர்களுக்குக் கிடைத்தது. இவற்றையெல்லாம் பார்த்து விவசாயம் என்றால் எப்படிச்செய்வது? இதுவரையில் பொதுவாக பயிர்களை எப்படி வளர்த்து வந்திருக்கிறார்கள்? எப்படி வளர்க்க வேண்டும்? என்பதைப் பற்றியெல்லாம் நான் எழுதத் தொடங்கினேன்... (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தமிழே தாயே என் உயிர்மூச்சே

கவிதை 02

ஓல்காப் புகழ் மிக்க
தொல்காப்பியத்தையும்
பல்காப்பியங்களையும்
பாருக்குத்தந்த தமிழ்

வீரமாமுனிவரையும்
விபுலானந்த அடிகளையும்
உமறுப்புலவரையும்
உலகுக்குத் தந்த தமிழ்

ஆறுமுக நாவலரை
ஆசுகவி மார்பலரை
ஆயிரம் ஆயிரமாய்
அவனிக் களித்த தமிழ்

சைவம், வைஸ்ணவம்
சமணம், பெளத்தம்
இஸ்லாம், கிறிஸ்தவம்–என
எல்லாச் சமயக்
கருத்துக்களும் உள்ளடங்க
பல்வேறு காப்பியங்கள்
பாருக் களித்த தமிழ்
தரணியிலே வேறெந்த
மொழிக்கு மிலாச் சிறப்பமைந்த
தனித்தமிழ் –தீங் கனித் தமிழ்
பரணியிலே உலாவந்து
பிள்ளைத்தமிழ் பாடி
கலம்பகங்கள் கோவைகள்
அந்தாதி தூது
காப்பியங்கள் மாக்கதைகள்
புராணங்கள், பதிகங்கள்
குறவஞ்சிப் பள்ளுக்கள்
குறைவறவே தந்ததமிழ்

அகவல், விருத்தம், வஞ்சி
பரி, கலி, வெண்பா– என
அகலமாய் யாப்புக்களை
அணிகலனாய் அணிந்த தமிழ்
ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என
வீசுபுகழ் கவிதைகளை
விண்ணதிரத் தந்ததமிழ்

அறத்தையும் மறத்தையும்
திறத்தோடு தந்த தமிழ்
அகத்தையும் புறத்தையும்
இகத்தையும் தந்ததமிழ்

பொற்றாமரைக் குளத்தில்
போய் விழுந்த நக்கீரன்
செருக்கடக்க வந்த
சிவனார் வளர்த்த தமிழ்

சிறுகதை, நாவல்
கட்டுரை, கடிதம், சிறுவரியல்
ஆய்வு, விமர்சனம்...
புலம்பெயர் இலக்கியம்
புகலிட இலக்கியம்

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கவிதை"

புதுக்கவிதை எனப் புதிய
புதுமைகளை ஏற்ற தமிழ்
இயல் இசை நாடகமாய்
என்றும் இனிக்கின்ற
செயல் செய்யும் எங்களது
செந்தமிழாம் தேன் தமிழை

பேசாத தமிழன் ஒரு தமிழன் தானோ
பிறிதான பிறவியொன்றோ நீரே
சொல்வீர்

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே காற்றோடு
முன்தோன்றி மூத்த தமிழ்
சொல்தோன்று முன்னே
இதழசைய வாய் திறக்க
'அ' என்றே முன் தோன்றிய
மூத்த தமிழ்

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலை யாழமும் துளுவும்"
இன்ன பிற மொழிகளென
இந் நிலத்தில் இருப்பவைகள்
தன்னிடத்தில் தோன்றியதால்
தாயாகி நின்ற தமிழ்

வடமொழியாம் சமஸ்கிருதம்
தோன்றுவதற்கும் வழிவகுத்த
தாய்த் தமிழாய் அறிஞர் பலர்
போற்றுகின்ற எங்கள் தமிழ்

கவிஞர் அகளங்கன்

சிந்து வெளி என்னும் வெளி
தன்னின் மொழியாயிருந்த
முத்து மொழி எங்கள் மொழி
மூத்த மொழி எங்கள் மொழி

செம்மொழியாய் உலகெங்கும்
சீராட்ட இவ் வுலகில்
எம்மொழியாம் தமிழ் மொழிபோல்
எம்மொழியை யாம் சொல்வோம்
(முற்றும்)

பல்வேறு மக்களின்மொழிகளைப் பேசும் மக்களின் ராஜத்துவமும் அதிகாரத்துவமுமே அம் மொழிகளின் வளர்ச் சிக்கும் பரம்பலுக்கும் பிரதான காரணிகளாக இருந்துள்ளமையை வரலாறு எமக்குப் புலப்படுத்தியுள்ளது. பல்வேறு இனங்களின் பெருந் தொகையிலான புலப்பெயர்வுகளையும் மொழிப் பரம்பலுக்கும் மொழி வளர்ச்சிக்கும் நுண் துணைக் காரணிகளாகக் குறிப்பிடலாம். இரண்டாவது உலக மகாயுத்த காலத்திலிருந்து இதை விட நீண்ட காலம் நீடித்துச்செல்லும் இலங்கையின் இனப் பிரச்சினைப் போராட்டம் வரை இதற்குச் சான்றாதாரங்கள் உள்ளன. இருப்பினும் இதனை நிரந்தரமான, ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்காகக் கொள்ளலாமா என்பது ஆய்வுக்கு உரிய தாகும்

–ராஜ ஸ்ரீ காந்தன்

# இலங்கைக்கு எதிரான யுத்தக்குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் யுத்தக் குற்றச் செயல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சட்ட விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் சட்டத்தரணி ஜே.டி.இசட். குணசேகர தலைமையில் உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட உள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொது மக்கள் கொல்லப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பில் விசேட சட்டத்தரணிகள் குழு ஆராயவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சனல் 4 ஊடக ஆவணப்படம் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஏன் இத்தனை காலம் பகிரங்கப்படுத்தப்படவில்லை? யுத்தத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தால் அதற்கான ஆதாரங்கள் எங்கே? போன்ற கேள்விகளை எழுப்ப உத்தேசித்துள்ளதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் என்பவர் சுகாதார அமைச்சினால் அண்மையில் சுகாதார சேவைகள் கொள்கையின் கீழ்(219 ஆவது அதிகாரத்தின் கீழ்) யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைக்குழு அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கோப்பாய் பிரதேச செயலகத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார்.

அத்துடன் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்டத்திற்கான கல்வி மற்றும் கலாசார விடயங்களுக்கான பொறுப்பான மாவட்டப் பணிப்பாளராகவும் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆயுட் கால உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார். (ஸ்ரீ-2)

# நாட்டின் புகையிரத சேவையை சீரமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சீனாவில் இருந்து மேலும் 13 புகையிரத பவர் செட் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 190 கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்படும் இவை அடுத்த வருட ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டு பவர் செட்இயந்திரங்கள் உல்லாசப் பயணிகளின் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் 7 இயந்திரங்கள் மலைநாட்டு புகையிரத சேவைகளுடன் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இது தவிர இரண்டு இயந்திரங்கள் களனி புகையிரத பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# கொழும்பு துறைமுகம் அபிவிருத்தி

மஹிந்த சிந்தனைக்கு அமைய இலங்கையை ஆசியாவின் கடல்சார் கேந்திர நிலையாக மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுகம் மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக கொழும்பு தெற்கு துறைமுகத்தில் புதிய கொள்கலன் இறங்குதுறை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான முதலீட்டை வழங்க சர்வதேச தனியார் நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது.

5 கோடி ரூபா நிதி முதலீடு திட்டத்திற்கான ஒப்பந்தம் கடந்த 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த இறங்குதுறை நவீன வசதிகளுடன் இறங்குதுறையாக அபிவிருத்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல்களில் இருந்து பொருட்களை தாமதம் இன்றி கையாள்வதற்கும் இந்த இறங்குதுறையில் வசதிகள் இருக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்கும் விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகம்

(கொழும்பு)

பெரும் போக நெற்செய்கையை ஆரம்பிக்கவுள்ள விவசாயிகளுக்கு இரண்டு இலட்சத்து 58 ஆயிரம் புசல் விதை நெல்லை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த விதை நெல்லை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கையின் உதவி வதிவிட பிரதிநிதி பிறேமலால் குறுப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளும் புதிதாக விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள விவசாயிகளும் இதன் மூலம் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் ஆரம்பம் முதல் விதை நெல் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையைச் சேர்ந்த மூவர் பிரித்தானிய எல்லைக் கட்டுப்பாட்டினரால் கைது

பிரித்தானியாவில் அனுமதிப்பத்திரமின்றி வேலை செய்த இலங்கையைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மூவரும் பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்படுவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சட்டபூர்வமற்ற வேலையாட்களைப் இனங்காண்பதற்கு பிரித்தானியாவின் வெசல்ஷயரில் வேலை செய்பவர்களின் அனுமதிப்பத்திரங்களைத் தேடும் நடவடிக்கை ஒரு வாரமாக இடம்பெறுகின்றது.

இந்தச் சட்ட அமுலாக்கல் நடவடிக்கையானது சட்டபூர்வமற்று வேலைசெய்தல், போலித் திருமணங்கள், போலிக் கல்லூரிகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட குடியேற்றக் குற்றங்கள் போன்றவற்றைப் பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவர் அனுமதியற்றும் விசா முடிந்துவிட்ட நிலையில் சட்டபூர்வமற்று வேலை செய்து கொண்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் விட்னஸ்பகுதியிலுள்ள லிவர்பூல் வீதியிலுள்ள உணவு விடுதியில் பணியாற்றுபவர் என கூறப்பட்டுள்ளது. இது போலவே ரன்கோனிலுள்ள மேலும் இரு கடைகளில் வேலை செய்யும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 23, 37 வயதை உடையவர்கள் என் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருவருமே விசா முடிந்த பின்னனும் அங்கு தங்கியிருந்ததாகவும் கடைகளில் சட்டபூர்வமற்று வேலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமது குடிவரவுச் சட்டங்களை அலட்சியப்படுத்தும் எந்தவொரு நபரையும் தாங்கள் அந்நாட்டிலிருந்து வெளியேற்றுவோம் என பிரித்தானியாவின் எல்லைக் கட்டுப்பாட்டின் நடவடிக்கை நிர்வாகி கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையை சிலர் ஊழல் மிகுந்த நாடாக மாற்றியுள்ளனர்

## ரணில் குற்றச்சாட்டு

இலங்கையை சிலர் ஊழல் மிகுந்த நாடாக மாற்றியுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தற்போதைய அரசாங்கமே ஆட்சியில் உள்ளதென சுட்டிக்காட்டிய அவர் கடந்த ஏழு வருடங்களில் இளைஞர்களுக்கு சிறந்த தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை எனவும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக பொய் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏழை மக்களுக்கு தகுந்த இடம் கிடைப்பதில்லை என தெரிவித்த அவர் கொழும்பிலுள்ள வறிய மக்களின் வீடுகள் உடைக்கப்படுவதாகவும் முச்சக்கரவண்டிகள் விரட்டியடிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தேசிய புலனாய்வுப் பிரிவினரால் ஜே.வி.பி.யினர் கண்காணிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. பிரச்சினை குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடத்தி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஜே.வி.பி. கட்சி ஸ்தாபிக்கப்பட்டது முதல் விடுவிக்கப்படாத சில புதிர்களுக்கு விடை தேடும் நோக்கில் தேசியப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரையில் கட்சியினால் வெளிக்காட்டப்படாத பல ஜே.வி.பி. தலைவர்கள் தற்போது கட்சித் தலைமையகத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

மாறுவேடமிட்ட தேசியப் புலனாய்வுப் பிரிவினர் கட்சித் தலைமையகம் அமைந்துள்ள பெலவத்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கண்காணிப்பதன் மூலம் ஜே.பி.வி.யின் இரகசிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்த முடியும் என தேசிய புலனாய்வுப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)




யாழ்.புத்தூர் பஞ்சசீல வித்தியாலயத்திற்கு கடந்த 22 ஆம் திகதி திடீர் விஜயம் மேற்கொண்டு அப்பாடசாலையின் குறைநிறைகளைப் பார்வையிட்ட ஆளுநர் அன்றையதினமே தனது பணிமனையில் வைத்து கணனிகள் மற்றும் காசோலையினை பாடசாலை அதிபரிடம் கையளிப்பதையும் அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படக்கூடாதென கர்தினால் கோரினார்

## விக்கிலீக்ஸ் தெரிவிப்பு; கர்தினால் அலுவலகம் மறுப்பு



அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்பில் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என அவரது அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கர்தினால் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் சில தரப்பினர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடாது என கர்தினால் கோரியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் கர்தினால் நடத்திய சந்திப்பின் போது இந்தக் கோரிக்கையை விடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

யுத்தக் குற்றச் செயல் தொடர்பில் விசாரணை நடத்தப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியதாக விக்கிலீக்ஸ் இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்ல மனிதர் எனவும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் கர்தினால் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித அடிப்படையும் கிடையாது என அவரின் பேச்சாளர் பேராயர் பெனடிக் ஜோசப் தெரிவித்துள்ளார்.

கர்தினால் பிறப்பில் சிங்களவர் என்ற போதிலும் இவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கரிசனையுடன் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முனைப்புக்களின் போது இவர் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்காக கரிசனையுடன் செயற்பட்ட காரணத்தினால் கர்தினாலுக்கு பௌத்த கடும்போக்குவாதிகள் கொலை மிரட்டல் விடுத்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

அடையாளஅட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை களின் விபரம் வருமாறு,

வேலாயுதம் புவேந்திரன் (கைதடி நுணாவில், சாவகச்சேரி), 582581355 V தேசிய அடையாள அட்டை மற்றும் திணைக்கள ஆள் அடையாள அட்டை, நற்குணராசா சுகந்தினி (சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு),0906030706 விசேட அடையாள அட்டை)

உரியவர்களை ஆதாரத்துடன் வந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-12)

# ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள ஜே.வி.பி.உறுப்பினர்கள் ஆர்வம்

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தரப்பைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள இணைய ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஜே.வி.பி. உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி.யை கூட்டணிக்குள் இணைத்துக் கொள்வதா அல்லது உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதா என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவருமான ஆளும் கட்சி முக்கியஸ்தரினால் ஜே.வி.பி. யுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் சாதாரண உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி.யில் இணைந்து கொள்ளும் திட்டமில்லை என ஜே.வி.பி. உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜே.வி.பி.யின் முன்னணி மாணவர் அமைப்புக்கள் பிரேம்குமார் தரப்புக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளன.

குறிப்பாக சமீர கொஸ்வத்த, உந்துல் பிரேமரட்ன மற்றும் துமிந்த நவகமுவ போன்றவர்கள் பிரேம்குமார் தரப்புக்கு ஆதரவினை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# போரின்போது படையினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தவில்லை

## திவயின தெரிவிப்பு

போரின்போது அரசாங்கப் படையினர் வன்னிமக்கள்மீது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்பதனை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த சில விடுதலைப்புலி ஆதரவாளர்கள் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் வன்னியைச் சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

வன்னியில் காயமடைந்தவர்களுக்கு இந்திய மருத்துவர்கள் சிகிச்சை அளித்துள்ளதாகவும் இதன் போது இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு இலக்கான எவரும் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. விக்கிலீக்ஸ் தகவலின் அடிப்படையில் இந்த செய்தியை வெளியிடுவதாக திவயின அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




★1255-அசிசியின் புனித கிலாராவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

★1907-நியூசிலாந்து, நியூபவுண்லாந்து இரண்டும் பிரித்தானியப் பேரரசின் டொமினியன்களாகின.

★1918-முதலாம் உலகப் போர்: அமெரிக்க வரலாற்றிலேயே அதிக இரத்தம் சிந்திய போர் மியூஸ்- ஆர்கன் தாக்குதல் பிரான்சில் ஆரம்பம்.

★1934-ஆர்.எம்.எசு. குயின் மேரி நீராவிக்கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

★1944-இரண்டாம் உலகப் போர்: மார்கெட் கார்டன் நடவடி க்கை தோல்வியடைந்தது.

★1950-ஐக்கிய நாடுகள் படைகள் வட கொரியாவிடமிருந்து சியோல் நகரை மீண்டும் கைப்பற்றின.

★1950-இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.

★1960-பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக்கான தமது ஒத்துழைப்பை அறிவித்தார்.

★1962-யேமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.

★1973-அத்திலாந்திக் மேலான் தனது முதலாவது இடை நிறுத்தல் இல்லாத பயணத்தை கொன்கோர்ட் விமானம் பறந்து காட்டியது.

★1997-இந்தோனேசிய விமானம் மெடான் அருகே விபத்துக்குள்ளாகியதில் 234 பேர் கொல்லப்பட்டனர்.

★1997-இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்கம் அசிசியின் பிரான்சிசு தேவாலயத்தின் ஒரு பகுதியைச் சேதப்படுத்தியது.

★2002-செனெகல் நாட்டு கப்பல் ஒன்று காம்பியாவில் மூழ்கியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

★2008-சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இவெசு ரொசி ஆங்கிலக் கால்வாயை ஜெட் இயந்திரம் பூட்டப்பட்ட இறக்கை மூலம் கடந்த முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றார்.

### பிறப்புக்கள்

★1833-சார்ள்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல்வாதி (இ.1891)

★1890-பாபநாசம்சிவன், கர்நாடக இசை அறிஞர் (இ.1973)

★1932-மன்மோகன் சிங், இந்தியப் பிரதமர்

★1981-செரீனா வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை

### இறப்புக்கள்

★1895-லூயி பாஸ்டர், வேதியியல் அறிஞர் (பி.1822)


★1959-தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (பி.1876)

★1978-மான் சீகபான், நோபல் பரிசு பெற்றவர் (பி.1886)



★இலங்கை பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவு தினம் (பி.1899)

# நவீன எண் சோதிடம்




## கடுமையாக முயன்று வெற்றி பெறுவதே இவர்களது இலட்சியம் 55

### உடல் எண் ௬ உயிர் எண் ௮

6,15,24 போன்ற தேதியில் பிறந்து பிறந்த தேதி,மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், சனி ஆதிக் கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு சுமா ரான உயரத்துடனும், சிறிது மிகுந்த சிவந்த கண்களுடனும் காட்சியளிப்பர். எந்தப் பொரு ளையும் உன்னிப்பாகக் கவனிப் பர். கடுமையாக முயன்று வெற்றி பெறுவதே இவர்களது இலட்சியம். போகம் சம்பந்த மான விடயங்களில் அதிக நாட்ட முடைய இவர்கள் தமக்கு தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்த வுடன் அதைக் குறைத்துக் கொள்ளுவர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் தங்களுடைய கடுமையான உழைப்பால் தான் உயரமுடியும் எனக்கூறுவர். இவர்களது மனம் மோட்டார் எலக்ட்ரிக் சாதனங்கள், கவிதை, கதை, ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றில் இலயிக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர், இளமையிலே வசதி படைத்தவர் களாக இருந்தாலும், பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தமது தனித்தன்மை யால் உயர்வர்.

ஆனால், பெயர் பொருத் தமின்றி இருக்குமேயானால்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

அனைத்து விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கும் இவர் கள் எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருப்பர். தன்னால் முடிந்த வரை பிறருக்கு உதவுவதாலும் தம் தகுதியை உயர்த்திக் கொள்வர்.

இவர்களுக்கு பெயர் மட்டும் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் தாம் செய்யும் தொழிலோ உயர்ந்த நிலையை அடைவர்.

மறைத்துப் பேசத் தெரியாத இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடுவர். இவர்களுடைய மனம் வரலாற்று புகழ் பெற்ற இடங்களைப் பார்ப்பதிலும், பெரிய தொழிற்கூடங்களை கண்டு களிப்பதிலும் ஆர்வம் இவர்களது வாழ்வில் அடிக்கடி தோல்வியைச் சந்திக்க நேரிடும். உலகிலுள்ள அனைத்து விடயங்க ளையும் தெரிந்து வைத்திருக்கும் இவர்கள் எப்போதும் எதையாவது செய்துகொண்டே இருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவதாலும் தம்தகுதியை உயர்த் திக்கொள்வர். இவர்களுக்கு பெயர் மட்டும் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் தாம் வகிக்கின்ற உத்தியோகத்திலோ அல்லது தாம் செய்யும் தொழிலிலோ உயர்ந்த நிலையை அடைவர். மறைத்துப் பேசத்தெரியாத இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடுவர். இவர்க ளுடைய மனம் வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களைப்பார்ப்பதிலும், பெரிய தொழிற் கூடங்களைக் கண்டுகளிப்பதிலும் ஆர்வம் காட்டு வர். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்து விட்டால், நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வாழ்வர். ஆனால், பிறந்த தேதிக்குப் பொருத்த மற்ற பெயர் அமைந்து விட்டால் வீண் குழப்பங்களும், விரயச் செலவுக ளும் வந்து எதிர் நிற்கும். பிறருக் காக ஒரு பிரச்சினையில் இறங்கும் போது துணிவாக செயற்படுவர். ஆனால், தனக்கென்று வரும்போது மிக அமைதியாகச் செயற்படுவர். இவர்களிடம் யோசனை கேட் பதற்குப் பலர் வருவர்.

சட்டம், சமயம், மருத்துவம், கணிதம் போன்றவற்றில் ஆராச்சி இருக்கும். இவர்கள் எத்துறையில் இறங்கினாலும் சிறப்பான முன் னேற்றத்தைப் பெறும் வாய்ப் புள்ளது. ஆனால் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமற்ற பெயராக இருக்குமேயானால்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

முன்னேற்றம் தடைப்படும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில், உத்தியோகம் பார்ப்பவர்கள் சிலர். ஆனால் தொழில் செய்பவர்கள் பலர். வாகனம் ஓட்டுவதிலும், வாகனத்தை அலங்கரித்து வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உடைய வர்களாக இருப்பர். தூர தேசப் பயணங்கள் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டும் இவர்கள், தாம் செய்கின்ற பயணம் எதிர்காலத் தில் நல்ல வருவாய்க்கு வழி காட்ட வேண்டும் என எண்ணு வர். பொதுவாக இந்த எண்ணிக் கைக்காரர்களுக்குப் பொருத்த மான பெயர் அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர் களுக்கு இரும்பு சம்பந்தப்பட்ட, நெருப்பு சம்பந்தப்பட்ட அனைத் துத் தொழிலும் சிறந்தவையே. மேலும் ஆடம்பரப் பொருட்க ளாலும், கமிஷன், கான்ட்ராக்ட், ஏஜென்ஸிஸ் போன்றவற்றாலும் இலாபம் பெறுவர்.

**நோய்**

சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு, மலச்சிக்கல், உஷ்ண சம்பந்தப் பட்ட நோய், மூட்டு வலி, இரத்தக் கொதிப்பு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சுக்கிரன், புதன், சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,51,60,69,14,23, 32,41,50, 59,19,37,46,64 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,5,1

யோகமான தேதிகள்- 6,15,24, 5,14,23

யோகமான நிறம்- நீலம், பச்சை, மஞ்சள்

யோகமான மோதிரக்கல்- மரகதம், நீலக்கல்


ஆகாததேதிகள்- 3,12,21,30

ஆகாத நிறம்- கறுப்பு, சிவப்பு, ஆரஞ், சுத்தரிப்பூ நிறம்

### பெயர் எண்களின் பலன்

**59 எண் பலன்**

புதனாகிய 5 உம், தைரியத் தலைவனாகிய செவ்வாய் என்ற 9ம் சேர்ந்து 59 வருவதால், இந்த எண்ணை பெயரில் உடையவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர். பிறர் செய்கின்ற தவறைப் பொதுமக்களிடம் பேச் சாலும், எழுத்தாலும் விளங்குவர். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் பெற்று பொதுமக்கள் ஆதரவால் பேரும், புகழும், செல்வமும் வந்து சேரும். காமம் பெருகும். பித்த சம்பந்தமான நோய்கள் வரும். வீடு, நிலம், வாகனம்



கண்டிப்பாக கிடைக்கும். கான்ட் ராக்ட் கமிஷனால் இலாபம் உண்டு.

**60 எண் பலன்**

சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட இந்த எண் கவர்ச்சியான நடை, உடை, பாவனைகளையும், பிறரை மகிழ்விக்க கூடிய காரியங்களை யும் தரக்கூடியது. பேச்சாலும், எழுத்தாலும் பொருளீட்டக்கூடிய வாய்ப்பை உண்டு பண்ணும். குன்றாத அதிர்ஷ்டம் உண்டு. தன்னையும், தன்னைச் சார்ந்தவர் களையும், உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர பாடுபடுவர். இல்லற வாழ்க்கையில் இன்புற்று வாழ உதவும் இந்த எண் 3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்தவர் களுக்கு நேர்மாறான பலனைக் கொடுக்கும்.

**61 எண் பலன்**

சுக்கிரனாகிய 6உம் சூரியனா கிய 1ம் சேர்ந்து 61 வருவதால் வாழ்க்கையில் எல்லா இன்பத் தையும் அனுபவித்துப் பின் துன்பப்படுவர். குடும்ப வாழ்க் கையில் இன்பம் இராது. ஆரோக் கியம் குன்றும். மனதில் கவலை யைச் சுமந்து கொண்டே இருப்பர். ஆனால், 2,11,20,29 ஆகிய தேதிகளில் பிறந் தவர்கள் இப் பெயரை வைத்துக் கொண்டால் நல்ல குடும்பம், நல்ல செல்வம் ஆகியவற் றைப் பெற்று வாழ்வர்.

**62 எண் பலன்**

இந்த எண்ணை பெய ராக கொண்டால் இப் பூவுலகிலுள்ள அனைத்து இன்பங்களையும் அனு பவிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். முறை கேடான இன்பங்களிலும் மனம் நாடிச் செல்லும். இதனால் பலரை விரோதித்துக் கொள் ளும் சூழ்நிலையும் உண்டாகும். தன் குடும்ப வாழ்க்கை பாதிக் கப்படும். கெட்ட வழிகளுக் கெல்லாம் புதிய வழிகாட்டும். பிறரை ஏமாற்றுவதற்கெல்லாம் திட்டம் தீட்டுவர். 5,14,23 போன்ற தேதிகளில் பிறந்தவர் களுக்கு மட்டும் ஓரளவு நற் பலனை அளிக்கும்.

(தொடரும்)

# அரசியல் நீதிப்படி எங்களுக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்

ஜெனீவா நகரிலுள்ள ஐ.நா. முற்றத்தில் கடந்த 19ஆம் திகதி 10ஆயிரம் ...த் தமிழர்கள் ஒன்று திரண்டு ...ங்குதமிழ் நிகழ்வு நடத்தி பெரும் எழுச்சியை ஏற்படுத்தி இருக்கி...னர். 10ஆண்டுகளுக்கு முன்பு, ...லிப்போராளிகளால் ஈழத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, பொதுவான தரப்பினரையும் போராட்டத்தின் பக்கம் கொண்டு வந்தது. தொடர்ந்து ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா என புலம்பெயர் தமிழர்கள் வாழும் அனைத்து கண்டங்களிலும் ஆண்டுதோறும் பொங்குதமிழ் நிகழ்வு பெரும் எழுச்சியுடன் நடத்தப்பட்டு வந்தது. முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்னர் எல்லாமே மாறிப் போனது.

இந்த சூழலில், இலங்கை இராணுவத்தின் போர்க்குற்றம் பற்றி. 19ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைக் குழுவில் விவாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட அதே நாளில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொங்குதமிழ் நிகழ்வுக்கு அழைப்பு விடுத்தது. ஈழத்தின் ஈரக்குலையை அறுத்த இறுதிப்போரை நிறுத்தக்கோரி ஜெனீவாவில் உள்ள ஐ.நா.முற்றத்தில்தான் ஈழத் தமிழரான முருகதாசன் உயிர்நீத்தார்.

விட்டனர். இப்படி ஜேர்மனியிலிருந்து வந்திருந்த மூன்று பேருந்துகளை நகரின் எல்லைக்குள் விடாமலேயே திருப்பி அனுப்ப வந்தவர்களுக்கோ பெருத்த ஏமாற்றம்.

பெருங்கூட்டத்துடன் ஜெனீவா புகையிரத




நிலையம் அருகிலுள்ள பூங்கா முன்பு பிற்பகலில் ஆரம்பித்த பேரணி ஐ.நா. முற்றத்தில் உள்ள முருகதாசன் சதுக்கத்தில் முடிவடைந்தது. 2 கிலோமீற்றர் தொலைவைக் கடப்பதற்கு ஒரு மணிநேரம் ஆனது. கொட்டிய மழையை ஒரு பொருட்

தித்த போராட்டக் குழுவினருடன் ஏனைய இனத்தவரும் உடன்சென்றது ஐ.நா அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

நாடுகடந்த தமிழீழ அரசின் நோர்வே எம்.பி.யான வைத்தியர் சிவகணேசன் நம்மிடம் தெரிவிக்கையில், அரசி

களாக மாவீரர் வீரவணக்க நிகழ்வை உணர்வெழுச்சியுடன் நடத்தி வருகிறோம். இந்த நிலையில் இலங்கை அரசு சில குள்ளநரிகளை உருவாக்கி மாவீரர் வணக்க நாளை குலைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இது எங்கள் தேசிய ஆன்மாவின் மீது நடத்தப்படும் தாக்குதல்.

எனவே முளையிலேயே இதைக் கிள்ளி எறியவேண்டும் என்பதற்காகவே பொங்குதமிழ் நிகழ்வுகளில் தீவிரமாகி இருக்கிறோம் என்று அதிர்ச்சியூட்டியபடி சொன்னார்.

ஐ.நா.மனித உரிமைக் குழு


செங்கொடியின் படம் ஏந்தி...

வின் இந்தக் கூட்டத்தில் தீர்வு கிடைக் காத பட்சத்தில் மீண்டும் மார்ச்சில் நடக்கும் கூட்டத்தின் போதும் பொங்குதமிழ் நிகழ்த்துவோம். போராடுவது ஒன்றுதான் ஈழத் தமிழ்ச் சமூகத்துக்கு உள்ள ஒரே வழி எனும் போது தொடர்ந்து அதைச் செய்து கொண்டே இருப்போம். தாயகத்தில், தமிழகத்தில் தமிழர் வாழும் நிலங்களில் எல்லாம் இதே உணர்வுநிலை நீடிக்கவேண்டும் என ஆதங்கப்பட்டார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பா

## ஐ.நா.வை முற்றுகையிட்ட புலம்பெயர் ஈழத்தமிழர்கள்

அதன் பின்னர் ஈழத்தமிழர்களை பொறுத்தவரை அந்த இடம் முருகதாசன் சதுக்கம் என அழைக்கப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமை குழுவின் 18ஆவது கூட்டத்தொடர் ஆரம்பித்த நிலையில் அந்த சதுக்கத்தில் 10ஆயிரம் ஈழத்தமிழர்கள் இதற்காக பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே, சுவீடன், டென்மார்க்,பெல்ஜியம் என ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் பேருந்துகளில் கூட்டம் கூட்டமாக சுவிஸில் மக்கள் திரண்டனர். பங்கேற்பாளர்களின் கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க ஒரு கட்டத்தில் கூட்டத்தைச் சமாளிக்க முடியாது என ஏனைய நாடுகளில் இருந்து வந்த பேருந்துகளை சுவிஸ் பொலிஸார் அனுமதிக்க மறுத்து

டாகவே எடுத்துக் கொள்ளாமல் முன்னோக்கிச் சென்றபடி இருந்தது தமிழர் கூட்டம். பிரிட்டன் குர் சால் உள்ளாட்சிப் பிரதிநிதி பிளைன்ராபின், பிரான்ஸிலிருந்து வந்திருந்த மேயர் ஸ்டீபன் கேட்டினன் ஆகியோர், ஈழத்துக்கான நியாயத்தைப் பேசியபோது கூடியிருந்தவர்களிடம் பெரும் உற்சாகம்! ஜேர்மனி வாழ் சிங்களரான மனித உரிமை ஆர்வலர் விராஜ் மெண்டிஸின் வருகை நிகழ்வில் நெகிழ்ச்சியைக் ஊட்டியது.

முத்துக்குமார், முருகதாசன், செங்கொடி உட்பட்ட 21 தமிழினத் தியாகிகளுக்கும் ஐ.நா.முற்றத்தில் ஈகச் சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனின் செயலாளரைச் சந்

யல் நீதிப்படியும் ஐ.நாவின் சட்டதிட்டப்படியும் எங்களின் ஈழத் தாயகம் மீட்டுத் தரப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் கொடூரத்துக்குப் பின்னர் ஈழம்தான் எங்கள் இலட்சியம் என்பதை மீண்டும் உறுதியாகக் காட்டவே இந்த நிகழ்வு என்றார்.

பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை பிரதிநிதியான சிவகுரு பாலச்சந்திரன் பல இனங்களை ஒருங்கிணைக்க சமயங்கள் இருக்கின்றன. தமிழர்களை ஒன்றுபடுத்த மட்டும் எந்தமதமும் இல்லை.

எங்களை நாங்களே ஒற்றுமைப் படுத்திக் கொள்ளும் அவசியம் இருக்கிறது. கருத்து வேறுபாடுகளைக்கடந்து எங்களை நாங்களே சுத்தப்படுத்திக் கொள்ளவும், மீள் எழுச்சிக் கொள்ளவும் 18 ஆண்டு

### ஜூனியர் விகடன்

ளர்களில் ஒருவரான சுவிஸ் சிவலோகநாதன். சிறிய நாடான சுவிற்சர்லாந்தில் 10 ஆயிரம்பேர் திரண்டு பொங்கிய தமிழ் நிகழ்வானது நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கு புதிய டொனிக்.

ஈழத்தமிழர்களின்ஆன்மபலத்தைக் காட்டும் இதுபோன்ற நிகழ்வுகளுக்குப் பலன் கிடைக்கும் காலம் எப்போது வரும்?

இரா.தமிழ்க்கனல்

# 2ஜி அலைக்கற்றை ஊழல் விவகாரம் மீண்டும் பரபரப்பான கட்டத்தில்!!!

## சிதம்பரத்தை தொடர்ந்து மன்மோகனுக்கும் நெருக்கடி

(புதுடில்லி)

2ஜி விவகாரம் தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம், பிரதமர் அலுவலகத்திற்கு எழுதிய கடிதம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி சிதம்பதரத்தின் பதவிக்கு வேட்டு வைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ள நிலையில் ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணயம் தொடர்பாக பிரதமருக்கு முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் எழுதிய கடிதம் புதிய பூதத்தை கிளப்பி யுள்ளது. இதுதொடர்பாக மன்மோகன்சிங் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த இமாலய ஊழல் மீண்டும் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. 2ஜி அலைவரிசையை ஏல முறையில் விற்கும்படி முன்னாள் நிதி அமைச்சர் சிதம்பரம் வலியுறுத்தி இருந்தால் ஸ்பெக்ட்ரம் ஊழலே நடந்திருக்காது என பிரதமர் அலுவலகத்துக்கு நிதி அமைச்சர் எழுதிய கடிதம் சமீபத்தில் வெளியாகி டில்லி அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. இதனால் அமைச்சர் சிதம்பரம் பதவி விலக வேண்டும் என பா.ஜ. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் 2ஜி ஸ்பெக்ட்ரத்துக்கான விலை நிர்ணயம் தொடர்பாக 2006 இல் முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதிமாறன் பிரதமருக்கு எழுதியதாக வெளியாகியுள்ள கடிதம் புதிய சர்ச்சையை எழுப்பியுள்ளது.

கடந்த 2006 ஜனவரியில் இராணுவத்திடம் இருந்து கூடுதல் ஸ்பெக்ட்ரத்தை பெற்று தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது குறித்து ஆய்வு செய்யவும் ஸ்பெக்கட்ரம் விலை நிர்ணயம் செய்யவும் மத்திய அமைச்சரவை குழுவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தார். இதனடிப்படையில் அமைச்சரவை குழு 2006 ஜூனில் தன் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதாக இருந்தது.

ஆனால், ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணய அதிகாரம் அமைச்சரவைக் குழுவுக்கு இருப்பதை விரும்பாத அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதிமாறன் 2006 பெப்ரவரி முதலாம் திகதி இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை சந் தித்துப் பேசினார். ஸ்பெக்ட்ரம் விலை நிர்ண யம் செய்யும் அதிகாரம் தனது துறைக்கே வேண்டும் என அப்போது வலியுறுத்தினார். இதற்கு பிரதமர் மன்மோகன் சிங்கும் சம்மதம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதனடிப்படையில் அமைச்சரவை குழுவுக்கான அதிகார வரம்பைக்குறைக்க வலியுறுத்தியும் ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணய அதிகாரத்தை தங்கள் அமைச்சகத்திற்கு வழங்குவதை உறுதி செய்யக்கோரியும் கடந்த 2006 பெப்ரவரி 28 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தயாநிதிமாறன் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது, உங்களை சந்தித்தபோது இராணுவ அமைச்சகத்திடம் இருந்து ஸ்பெக்ட்ரத்தை விடுவித்து தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் விவகாரத்தில் மத்திய அமைச்சரவை குழுவின் செயல்பாடு பற்றி பேசினோம். அப்போது இந்த விடயத்தில் அமைச்சரவை குழுவின் செயல்பாடு நாங்கள் விரும்பியபடி இருக்கும் என நீங்கள் உறுதி அளித்தீர்கள். அமைச்சரவை குழுவின் செயல்பாடு ஸ்பெக்ட்ரத்தை எடுத்துக் கொள்ளும் அளவில் மட்டுமே இருக்கும் என தெரிவிக்கப்பட்டு இருந்தாலும் அதற்கு மாறாக அமைச்சரவை குழுவுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டு இருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. இது தொலைத் தொடர்பு அமைச்சகத் தின் வழக்க மான பணிகளைப் பாதிக்கும் என நினைக் கின்றேன். எனவே, தயவுகூர்ந்து இந்த விடயத்தில் அமைச்சரவை குழுவின் செயற்பாடுகள் விட யத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டுகிறேன். இவ்வாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



இந்தக் கடிதத்தை தொடர்ந்து அமைச்சரவை குழுவின் செயற்பாடுகளில் 2006 டிசெம்பர் 7 இல் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இராணுவத்திடம் இருந்து ஸ்பெக்ட்ரத்தை பெறும் விவகாரத்தை மட்டும் அமைச்சரவை குழு கவனிக்கும் என அமைச்சரவை செயலகம் அறிவிப்பு வெளியிட்டது.

இந்த விவகாரத்தை தான் தற்போது பா.ஜ. கட்சியினர் கையில் எடுத்துள்ளனர். ஸ்பெக்ட்ரம் விலையை நிர்ணயம் செய்யும் பொறுப்பு தொலைத்தொடர்புத்துறை அமைச்சகத்திடம் தொடர்ந்து இருக்க வேண் டும் என்ற அடிப்படையில் கூட்டணி தர்மம் கருதி இந்த முடிவை பிரதமர் எடுத்ததாக பா.ஜ. கட்சியினர் கூறுகின்றனர்.

பிரதமரின் இந்த முடிவு தான் பின்னாளில் ஸ்பெக்ட்ரம் ஊழல் நடப்பதற்கு காரணமாக அமைந்து விட்டதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பா.ஜ. செய்தி தொடர்பாளர் பிரகாஷ் ஜாவேத்தகர் கூறுகையில், பிரதமருக்கு தயாநிதிமாறன் எழுதிய கடிதம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் விளக்கம் அளிக்க வேண்டும். இது வாய்மூடி மௌனமாக இருக்க வேண்டிய விடயம் இல்லை. குற்றச்செய லுக்கு உடந்தையாக இருக்கும் செயல் என கூறியுள்ளார். தயாநிதிமாறன் கடித விபரத்தை தகவல் உரிமைச் சட்டம் மூலம் விவேக்கார்க் என்ற வழக்கறிஞர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## அ.தி.மு.க. அணியில் தொடர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு



(சென்னை)

உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க. அணியிலேயே தொடரலாம் என்ற மன நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க. அணியில் இடம்பெற்றிருந்த பிரதான கட்சியான தே.மு.தி.க. அந்த அணியில் இருந்து விலகி தனித்துப் போட்டியிடுகிறது. அக்கட்சியின் வேட்பாளர் பட்டியலும் வெளியிடப்பட்டு விட்டன. மற்றொரு பிரதான கட்சியான மார்ஸிட்கட்சியும் தனித்துப் போட்டியிடப் போவதாக சனிக்கிழமை அறிவித்து விட்டது. இதே முடிவை புதிய தமிழகக் கட்சியும் எடுத்துள்ளது. இந்நிலையில் அ.தி.மு.க அணியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தனது முடிவை இன்னும் அறிவிக்காமல் உள்ளது.

அ.தி.மு.க.-இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் இடையே இதுவரை பல சுற்று பேச்சு நடந்தும் உடன்பாடு ஏற்படவில்லை. இந் நிலையில் அக்கட்சிகளின் மாநில நிர்வாகக் குழுக்கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அக் கூட்டத்துக்குப்பின் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான முடிவை கட்சி அறிவிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அந்தக் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அ.தி.மு.க. தலைமை அழைப்பு விடுத்தது. இதனை ஏற்று இந்திய கம்யூனிஸ் கட்சி நிர்வாகிகள் முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ்ட் தோட்ட இல்லத்துக்கு சென்று அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் பேசினர்.

இந்தப் பேச்சு வார்த்தையைத்தொடர்ந்து அ.தி.மு.க. அணியில் தொடரலாம் என்ற முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை வந்துள்ளதாக தெரிகிறது. இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. அணியில் மார்க்சிஸ்ட் கட்சியையும் தக்க வைக்கும் முயற்சியில் இந்திய கம்யூனிஸ்ட் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)




## 2ஜி அலைக்கற்றை வழக்கில் பிரதமரை விசாரிக்க வேண்டும்

## பா.ஜ.க. வலியுறுத்தல்

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கையும் விசாரணை செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா டில்லியில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் செயல்பாடு குறித்து விசாரணை நடத்தப்படாவிட்டால் இந்த வழக்கில் நீதி கிடைக்காது. வழக்குத் தொடர்பாக அப்போதைய மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரத்திடமும் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

2ஜி வழக்கில் ப.சிதம்பரத்துக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் உள்ளன. ஆனால், அவர் குற்றமற்றவர் என்று சி.பி.ஐ தரப்பில் நீதிமன்றத்தில் வாதாடுவது நகைப்புக்குரியதாக உள்ளது. தொலைத்தொடர்புத்துறையின் நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு நிலையிலும் அத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா பிரதமருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். புதிய முடிவை மேற்கொள்ளும் போது அது குறித்து பிரதமருக்கு அவர் விரிவாகக் கடிதம் எழுதியிருக்கிறார்.


2ஜி விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் ஏ.பி. பரதன், குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கும் ப.சிதம்பரம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதேவேளை, பா.ஜ.க. கம்யூஸ்ட் கட்சிகளின் குற்றச்சாட்டை காங்கிரஸ் பொதுச் செயலர் திக் விஜய் சிங் மறுத்துள்ளார்.

ப.சிதம்பரம் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. அவரைப் போன்ற செயற்றிறன் மிக்க அமைச்சரை குற்றம் சாட்டும் முன்பு பா.ஜ.க. தலைவர்கள் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்ள கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் கூறியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# இலங்கையின் கொலைக்களங்கள் கனேடிய பாராளுமன்றத்தில்



சனல்-4 வெளியிட்டுள்ள இலங்கையின் கொலைக்கள ஆவணத் திரைப்படத்தைக் கனேடியப் பாராளுமன்றத்தில் எதிர்வரும் வாரங்களுக்குள் திரையிட மனிதவுரிமை கண்காணிப்பகம் நேரடியாக முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

மனிதவுரிமை கண்காணிப்பகம் ஆரம்ப காலத்தில் விடுதலைப்புலிகளை தீவிரமாக எதிர்க்கும் ஒரு மனித அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. குறிப்பாக கனடாவில் விடுதலைப் புலிகளையும் உலகத் தமிழர் இயக்கத்தையும் தடைசெய்வதற்காக நேரடியாக அது முழுமூச்சாக ஈடுபட்டது.

மேற்படி விடுதலைப்புகளின் தடை தொடர்பான ஆவணத்திலும் மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் தகவல்களின் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகளைக் கனடாவில் தடை செய்வதாக கன்சவேட்டிவ் அரசு அறிவித்திருந்தது.

அதே அமைப்பு இலங்கையைக் குற்றவாளிக்குண்டில் ஏற்றும் கையிலான ஆவணத்தை திரையிட முன்வந்தது. உண்மையிலேயே ஒரு சாதகமான மாற்றமாகவே பார்க்கப்படுகிறது.

மனிதவுரிமைக் கண்காணிப்பகம் விடுதலைப்புலிகளைக் கனடாவில் தடைசெய்ய முழுமூச்சாக உதவியதற்கான காரணமாக அதன் இணைப்பாளர் திருமதி ஜோ.பெக்கர் தமிழர்கள் அதிகமாக வாழும் கனடாவின் ஸ்காபரோ நகரில் வைத்த கருத்தரங்கை விடுதலைப்புலிகளின் ஆதரவு அரசியற் செயற்பாட்டாளர்கள் கூக்குரலிட்டு அது இடம்பெறாமல் குழப்பியடித்தார்கள் என்றும் மேற்குலகிலேயே இவ்வாறு விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் செய்தால் இவர்கள் இலங்கையில் எவ்வாறு மக்களுக்கெதிரான செயற்பாட்டை மேற்கொள்வார்கள் என்ற ஒரு கருத்தை ஏற்படுத்தக்கூடியவகையில் இந்தப் பண்பற்ற மலினச் செயற்பாடு வழிவகுத்ததுடன் அமைப்புக்களைத் தடை செய்யவும் காரணமாயிற்று.

குறிப்பாக,விவேகமற்ற செயற்பாடுகளின் மூலம் ஒரு மனிதவுரிமை அமைப்பை கோபப்படுத்தி விடுதலைப்புலிகளைத் தடை செய்வதற்கு வழி செய்ததே அதற்கு உதவுவதாக தங்களை மக்களுக்கு அடையாளம் காட்டியவர்களே அமைந்தது ஈழத்தமிழர்களின் வாழ்வியலில் என்றுமே மறக்கமுடியாத மாபெரும் துன்ப நிகழ்வாகும்.

இந்நிலையில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் உச்சமடைந்ததையடுத்து அது தனது நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தது. குறிப்பாக யுத்தக் குற்ற விசாரணை தொடர்பான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு அது தன்னாலான வகையில் செயற்பட்டு வருகிறது. இந்த மாற்றம் நிச்சயமாக தமிழர்கள் குறித்த சர்வதேசப் பார்வையை மாற்றி வருகிறது.

இதன் ஒரு அங்கமாகவே பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சியின் தயாரிப்பான கொலைக்களம் என்ற ஆவணம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள கேட்போர் கூடங்க்ள் ஒன்றில் திரையிடப்படவுள்ளது.

தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் இலங்கைக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திச் செயற்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)

# விண்ணப்பம்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டக் கற்கை நெறி MA in Development Studies and Public Policy ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே, விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இக்கற்கை நெறிகள் யாவும் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (4-12)

# கணவரை அடிக்கும் பெண்களுக்கு பத்தாயிரம் ரூபா ரொக்கப்பணம்

## ஆந்திரா கர்னூல் நகரில் விநோதம்

(கர்னூல்)

மது குடிக்கும் பழக்கம் உள்ள கணவரை பொதுக்கூட்டங்களுக்கு அழைத்துவந்து அவரை அவமானப்படுத்தும் விதத்தில் அடிக்கும் பெண்களுக்கு ஒருஅடிக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 10 ஆயிரம் ரூபாய் வரை ரொக்கப் பரிசு வழங்கப்படும் என ஆந்திர நீர்ப்பாசனத்துறை அமைச்சர் டி.ஜி.வெங்கடேஷ் தெரிவித்தார்.

ஆந்திரா கார்னூல் நகரில் கடந்த 23 ஆம் திகதி வெள்ளியன்று நடந்த விவசாயப் பெண்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர் கூறியதாவது, பெண்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிற பணத்தை மதுகுடிக்கும் பழக்கமுள்ள அவர்கள் கணவர்கள் வீணாகச் செலவிடுகின்றனர்.

கணவர்கள் மது அருந்துவதால் பெண்களின் வருமானம் எல்லாம் சாராயத்திற்குச் சென்று விடுகிறது. குடிப்பழக்கத்திற்கு அடிமையான கணவர்களை அவர்களது மனைவியர் இதுபோன்ற பொதுக்கூட்டங்களுக்கு அழைத்து வந்து மக்கள் மத்தியில் நிற்க வைத்து அடிக்கவேண்டும்.

கணவரை அவமானப்படுத்தும் விதத்தில் இப்படி அடிக்கும் பெண்களுக்கு ஒரு அடிக்கு ஆயிரம் ரூபாவுக்கு குறையாமல் 10 அடி அடித்தால் 10ஆயிரம் ரூபாயை ரொக்கப் பரிசாக அந்த இடத்தில் வழங்கப்படும். கணவரை 10 அடி அடிக்கும் பெண்கள் 10 ஆயிரம் ரூபாயை பம்பர் பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம். தெலுங்கானா பகுதியில் போராட்டங்கள் தொடர்ந்தாலும் மதுக்கடைகள் மட்டும் முழுவீச்சில் செயற்படுகின்றன. இவ்வாறு வெங்கடேஷ் கூறினார். (ஸ்ரீ-4)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்-2011

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை- 2011 இற்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரங்கள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பெயர் விபரங்களும் பாடசாலைகளும் வருமாறு,

எஸ். கிரிதரன் (யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தி-151, ஜெ.ஜீவப்பிரியன் (யா/ நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி-151, ஏ.பிரியநிலா (யா/வேலணை கிழக்கு ம.வி)-152, ஏ.வேணுஜன் (யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தி)152,எம்.பிரியதர்சினி (யா/ நெடுந்தீவு றோ.க.ம.கல்லூரி)-153,யூட் நிக்சன் ஒரிஸ்ஜேம்ஸ் (யா/நெடுந்தீவு சீகிரியாம்பிள்ளை அ.த.க.பா)-153, எஸ். திலக்ஷி (யா/யாழ்ற்ரன் கல்லூரி)153, பா. தனுஷன் (யா/அனலைதீவு வடலூர் அ.த. க.பா)-154.

எஸ்.நாகதீபா (யா/யாழ்ற்ரன் கல்லூரி)-154, ஈ. கோபிநாத் (யா/கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி)-154, ஏ.பிரணவரூபன் (காரை சுந்தர மூர்த்தி வித்தி)-155,எஸ்.கிருத்திகா (யா/அனலை தீவு வடலூர் அ.த.க.பா)-155,கே. காருண்யன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி)-155,கே. தர்சிகா (வேலணை கிழக்கு ஐயனார் வித்தி)-155, எஸ்.லக்ஷன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி)-155, ஆர்.ஜெனனி (யா/காரை மெய்கண்டான் வித்தி)-156,யு.யட்சனன் (அனலைதீவு தெற்கு அ.த.க.பா)-157,கே.விஷ் ணுகா (யா/ கரம்பொன் சிறிய புஷ்பமகளிர் ம.வி)-157, ஜெ.விதுர்சனா (யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பா)-158.

கே.கீர்த்திகா (யா/கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி)-158,பி.டுகீசன் (யா/புங்குடுதீவு ம.வி)-160,கே. சிந்துஜன் (யா/வலந்தலை வடக்கு அ.மி.த. க.பா)-161, ஜுட்ஸ் கிங் பிரின்ஸ் (யா/நெடுந்தீவு றோ.க.மகளிர்.கல்லூரி)-162, பி.சிவரா ஜினி (யா/கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வி)-162,பி. பவிசித்ரா (யா/ நாரந்தனை றோ.க.த. க.பா)-163, ஜி.டக்சன் (யா/ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை)-163, ஏ.மேரி தானிஸ்ஸா (யா/ நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி)-163, கே.டர்சிகா (யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி)-164,எஸ்.ரகு ராமன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி)-165,.

ஏ.யசிந்தினி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)-165,ஆர். நிதர்ஷனா (யா/ அனலைதீவு தெற்கு அ.த.க.பா)-167,ரி.துவாரகன் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பா)-168,ஆர்.நாகதீபன் (வேலணை தெற்கு ஐயனார் வித்தி)-172, ஆர்.நிமல் (யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)-172,எஸ்.புயலிசை (யா/யாழ்ற்ரன் கல் லூரி)-178,எஸ்.விதுர்சன் (யா/காரை ஊரி.அ. மி.த.க.பாடசாலை)-181.

# நிர்வாகசபைத் தெரிவு

(நல்லூர்)

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சி.லக்ஷிமிகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நிர்வாகத் தலைவராக ம.நந்தீஸ்வரன், உபதலைவராக எஸ்.குஞ்சிதபாதமும், செயலாளராக ந.கஜேந்திரகுமார், உபசெயலாளராக இ.மயில்வாகனம், பொருளாளராக சி.லக்ஷிமிகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் கோப்பாய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நிர்மலன், இருபாலை தெற்கு கிராம சேவையாளர் என்.ஜெயந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (4-12-134)

# ஐ.நா.சபை முன் மன்மோகனுக்கு எதிராக சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம்

ஐ.நா. சபையின் பொதுச் சபைக் கூட்டம் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். அப்போது ஐ.நா. சபை முன்பு நூற்றுக்கணக்காண சீக்கியர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த 1924 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து டில்லியில் நடந்த கலவரத்தில் ஏராளமான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு காரணமாக இருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட மத்திய மந்திரி கமல்நாத்தை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஸ்ரீ)


உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் திருமுருகன்கொம்நெற்

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :-0212227835




(ச/5449)

# பாலஸ்தீனத்தை ஐ. நா. சபை தனது உறுப்பு நாடாக அங்கீகரிக்க வேண்டும்

## ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கோரிக்கை


(நியூயோர்க்)

உலகின் 127 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பாலஸ்தீனத்தை ஐ.நா. தன் உறுப்பு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என அந்நாட்டு ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நேற்று முன்தினம் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார். அவருக்குப் பின் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடான்யாஹு தீர்மானங்கள் போடுவதைத் தவிர்த்து விட்டு பேச்சுவார்த்தைக்கு வரும்படி பாலஸ்தீனத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தாண்டுக்கான ஐ.நா. பொதுச் சபை கூட்டம் தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் கடந்த 23 ஆம் திகதி பேசிய பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கூறியதாவது,

கடந்த 1967 இற்கு முன்பிருந்த எல்லைகளுடன் கூடிய பாலஸ்தீன நாட்டை பாதுகாப்புக் குழுவில் அங்கீகரிக்க வேண்டும். இது வரை பாலஸ்தீனத்தை ஏற்றுக் கொள்ளாத நாடுகள் இனிமேலாவது அதை ஒரு நாடாக ஏற்க வேண்டும்.

பல ஆண்டுகளாக நாடோடிகளாகத் திரிந்து காலனி ஆதிக்கத்தில் அவதிப்பட்ட எமது மக்கள் பூமியில் உள்ள மற்றவர்களைப் போல விடுதலை பெற்ற நிலத்தில் இறையாண்மையோடு வாழ வேண்டிய நேரம் வந்து விட்டது. இவ்வாறு அப்பாஸ் கூறினார். அப்பாஸ் பேசிக் கொண்டிருந்த போதே பல நாடுகளின் உறுப்பினர்கள் அவரது பேச்சை அங்கீகரித்து எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர்.



இஸ்ரேல் பிடிவாதம் இதையடுத்து பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடான்யாஹு இஸ்ரேல் அமைதியையே விரும்புகிறது. ஐ.நா.வில் தீர்மானம் போடுவதால் அந்த அமைதியைக் கொண்டு வர முடியாது. பேச்சுவார்த்தையின் மூலமாகவே அதை சாதிக்க முடியும் என்றார். பாலஸ்தீன கோரிக்கை குறித்து இருநாட்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச் சபையில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாலஸ்தீன விடுதலைக்கு குறுக்குவழி எதுவும் கிடையாது. பேச்சுவார்த்தைகள் மூலமே அது சாத்தியம் என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன ஜனாதிபதி மற்றும் இஸ்ரேல் பிரதமர் பேச்சுக்களுக்குப் பின் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐ.நா. ஆகியவை இணைந்து விடுத்த அறிக்கையில், இன்னும் ஒரு மாதத்திற்குள் இருதரப்பும் சந்தித்து பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது பற்றி முடிவெடுக்க வேண்டும். எல்லை மற்றும் பாதுகாப்புக் குறித்து 3 மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் மூலம் 2012 கடைசிக்குள் ஓர் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளன.

ஐ.நா.பாதுகாப்பு குழுவில் உள்ள 15 நாடுகளில் ஒன்பது நாடுகள் ஒரு நாட்டை அங்கீகரிக்கவேண்டும். அப்படி அங்கீகரித்தபோதும் அமெரிக்கா உள்ளிட்ட நிரந்தர உறுப்பு நாடுகள் தங்கள் மறுப்பாணையை (வீட்டோ) பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். ஆனால், பாலஸ்தீன கோரிக்கை மீது தனது மறுப்பாணையை பயன்படுத்தப் போவதாக ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறிவிட்டார்.

அதனால் ஐ.நா. பாதுகாப்பு குழுவின் பாலஸ்தீன கோரிக்கை தோற்கும் என்றே நிபுணர்கள் கருதுகின்றனர். அதேநேரம் ஐ.நா. வில் தற்போது பார்வையாளர் அந்தஸ்தில் இருக்கும் பாலஸ்தீனம் பாதுகாப்பு குழுவில் தன் கோரிக்கை ஏற்கப்படாத பட்சத்தில் பொதுச் சபையில் விண்ணப்பிக்கும். அதில் இடம் பெற்றுள்ள 193 நாடுகளில் 127 நாடுகளின் ஆதரவை பாலஸ்தீனம் பெற்றிருப்பதால் நாடு அல்லாத பார்வையாளர் என்ற அடுத்த நிலை அந்தஸ்தை பெற முடியும். (ஸ்ரீ-4)


## வடகொரியாவை கண்காணிக்கும் ஜப்பானின் செயற்கைக்கோள்

(டோக்கியோ)

வடகொரியாவின் ஏவுகணைகள் மற்றும் அணுஆயுதங்களைக் கண்காணிப்பதற்காக ஜப்பான் உளவு செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் ஏவியுள்ளது.

வடகொரியா மீதான தென்கொரியா மற்றும் ஜப்பானின் சந்தேகம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஜப்பானின் புதிய பிரதமராக யொஷிஹிக்கோ நோடா பதவியேற்றவுடன் இருதரப்பு உறவுகளைச் சீர்படுத்த முயலும்படி வடகொரியா கோரிக்கை விடுத்தது.

அதை ஜப்பான் கண்டுகொள்ளவில்லை. வடகொரியாவின் அணுஆயுத உற்பத்தி மீது அமெரிக்கா ஜப்பானின் சந்தேகம் இன்னும் தீரவில்லை. கடந்த 22ஆம் திகதி ஜப்பானின் ககோஷிமா மாகாணத்தில் உள்ள டனேகஷிமா விண்வெளி மையத்திலிருந்து எச் 2ஏ என்ற உளவு செயற்கைக்கோள் ஏவப்பட்டது.



மொத்தம் 470 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் ஆக 28ஆம் திகதியே விண்ணில் ஏவப்படுவதாக இருந்தது. சூறாவளி தாக்குதல் இருந்ததால் மூன்று முறை ஏவும் திட்டம் தள்ளிவைக்கப்பட்டு இறுதியில் கடந்தவாரம் ஏவப்பட்டுள்ளது. வடகொரியாவின் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்கள் இருக் கும் இடங்களை இந்த செயற்கைக்கோள் கண்காணிக்கும்.

(ஸ்ரீ-4)




## புகுஷிமாவை சுற்றியுள்ள உணவு பொருட்களில் கதிரியக்க வீச்சு

உலகில் இதுவரை இல்லாத அளவுக்கு ஜப்பானில் கடந்த சில மாதங்களுக்கு முன் மாபெரும் அணுப்பேரழிவு ஏற்பட்டது. சுனாமி காரணமாக புகுஷிமா அணுமின் உலை பாதிக்கப்பட்டதால் ஜப்பான் முழுவதும் கதிரியக்க வீச்சு பரவியது. இந்தப்பாதிப்பு அங்கு விளையும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களிலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக அரிசியில் ஒரு கிலோவுக்கு 200 பெக்கோரல்ஸ் அளவில் கதிரியக்க வீச்சு இருக்கலாம். ஆனால் புகுஷிமா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் விளைந்த அரிசியில் கிலோவுக்கு 500 பெக்கோரல்ஸ் அளவுக்கு மேல் கதிரியக்க வீச்சு உள்ளது. இதனால் ஜப்பானில் விளையும் அரிசி உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களையும் தீவிர பரிசோதனைக்குப் பின்னரே விற்பனைக்குவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகளும் இது குறித்து விழிப்புணர்வுடன் உள்ளன. (ஸ்ரீ-4)

## நேபாளத்தில் மலையில் மோதி விமானம் விபத்து

### 10 இந்தியர்கள் உட்பட 18 பேர் பலி



நேபாளத்தில் சிறிய் ரக பயணிகள் விமானம் மலையில்மோதி விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்த இந்தியர்கள் உட்பட 18 பேர் பலியாகினர்.

நேபாளத்திற்கு சொந்தமான புத்தர போக்குவரத்து விமானமான பி.எச்.ஏ.-103 என்ற சிறிய ரக விமானம் ஒன்று நேற்றுக் காலை 7.30 மணிக்கு புறப்பட்டது.

இந்த விமானத்தில் 3 விமான ஓட்டிகள் 18, பயணிகள் இருந்தனர். இந்த விமானம் மவுண்ட் எவரெஸ்ட் சிகரப்பகுதிகளுக்கு சுற்றுலா சென்றது. சுற்றுலாவை முடித்துவிட்டு தலைநகர் காத்மண்டு விமான நிலையம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தது. அப்போது நடுவானில் பறந்து கொண்டிருந்த சிறிது நேரத்தில் விமானக்கட்டுப்பாட்டு ரேடாரிலிருந்து மறைந்தது. பின்னர் நேபாளின் லலித்பூர் மாவட்டத்தில் உள்ள கோட்டாண்டா வனப்பகுதியில் மலையில் மோதி நொருங்கி விழுந்தது.

அதில் பயணம் செய்த 18 பேரும் பலியாகினார். எவரெஸ்ட் சிகரப்பகுதியில் சுற்றுலாவை முடித்துக் கொண்டு காத்மண்டு திரும்பும் போது மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. விபத்திற்குள்ளான விமானத்தில் 10 இந்தியர்கள், 6 ஐரோப்பிய சுற்றுலா பயணிகள் இருந்துள்ளனர். இவர்கள் அனைவரும் விபத்தில் சிக்கி பலியாகியுள்ளனர்.

விபத்திற்குள்ளான பகுதிக்கு மீட்பு பணியை மேற்கொள்ள நேபாள உள்நாட்டு விமான போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். மேலும் நேபாளம் சர்வதேச விமான நிலையத்தைச் சேர்ந்த மீட்புக்குழுவினரும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



ஐ.நா.பொதுச்சபையின் 66ஆவது ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஐ.நா.செயலர் பான் கீ மூனை சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில் குறுக்கே வந்து நிற்கும் முற்றுப்புள்ளி மனச்சாட்சி.

~ ஸ்ரவின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## காணிப் பதிவுக்கு எதிரான பிரேரணை; கூட்டமைப்பு பதில் அளிக்க வேண்டும்

வடபகுதியில் இடம்பெற்றுவரும் காணிப் பதிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பிரேரணை ஒன்றைக் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் சபைக்குக் கொண்டுவந்தார்.

பிரேரணையை வாசித்த பின்னர் அதனை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வழிமொழிந்தால் மட்டுமே அந்தப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

எனினும் காணிப் பதிவிற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கொண்டுவந்த பிரேரணையை வழிமொழிவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை.

பிரேரணையை வாசிப்பதற்கு முன்னதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்துள்ளனர் என்றும் அவர்களிடம் பிரேரணையை வழிமொழியுமாறு விநாயகமூர்த்தி எம்.பி. கேட்டிருந்தபோதிலும், அவர்கள் இருவரும் பிரேரணை பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாமல் வேறோர் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்றுவிட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. எப்படியிருக்கிறது எங்கள் அரசியல் தலைமைகளின் நிலைப்பாடு?

எதுவாயினும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கொண்டுவந்த காணிப் பதிவிற்கு எதிரான பிரேரணையை வழிமொழியாமற் போனமைக்கான காரணம் என்ன என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

முன்பு ஒருமுறை டி.ஏ.ராஜபக்ஷவின் நினைவுப் பேருரை நடந்தபோது, அதில் முந்தியடித்து முன்னாசனத்திலிருந்த இரா.சம்பந்தன், காணிப் பதிவிற்கு எதிரான பிரேரணையை வழி மொழிவது தொடர்பில் காட்டிய அசமந்தம் ஏன்?

வடபகுதியில் நடைபெறும் காணிப்பதிவு தொடர்பில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நான் ஏன் அக்கறை கொள்ள வேண்டும் என்ற பிரதேசப் பாகுபாட்டை சம்பந்தன் அவர்கள் கடைப்பிடித்தாரா? என்ற சந்தேகம் இப்போது வலுக்கின்றது.

அண்மைக்காலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கில் மிகவும் மாறுபாடான நிலைப்பாடு தெரிவதைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

வன்னி யுத்தத்தின் மிகப்பெரும் கொடூரமான இழப்புகளுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர்.

ஆனால், கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பிக்களில் அநேகர் தமிழினத்திற்கு எதிராகச் செயற்படுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்நிலைமையை உடனடியாக மாற்றித் தமிழினத்தின் உரிமை விடயத்தில் கூட்டமைப்பு தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

அற்ப சலுகைகளுக்கு விலை போனால் தமிழினம் உங்களை ஒருபோதும் மன்னிக்காது என்பதை மறந்துவிடாதீர்கள்.

# அமெரிக்க பாதுகாப்பு சட்டம் போன்று இலங்கையிலும் சட்டம் கொண்டுவர முயற்சி

அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது போன்று உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் என்ற புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக லக்பிம நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தொடர் இடம்பெறுவதற்கு முன்னர் இப்புதிய சட்டமூலத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருப்பதால்தான் மனிதவுரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக சர்வதேச சமூகம் ஏற்படுத்திவரும் அழுத்தங்களைத் தணிப்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையிலிருக்கின்ற பாதுகாப்புச் சட்டங்களுக்கு ஒப்பானதாக இச்சட்டமூலம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் தீவிரவாதத்தை முறியடிப்பதற்காகப் புதிய சட்டமூலம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் கரிசனை கொண்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியமர்வை அதிகாரிகள் சிலர் தடுக்கின்றனர்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றச்சாட்டு

(புத்தளம்)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்களை அவர்களது தாயகத்தில் மீள்குடியேற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்கும் செயற்பாடுகளில் சில அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபடுவதாக கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிஷாத் பதியுதீன் கூறியுள்ளார்.

இந்தச் சவால்களை முறியடிக்க அமைச்சுப் பதவி தடையாக இருக்குமெனில் அதனைத் தியாகம் செய்துவிட்டு மக்களோடு நின்று போராடி அதனைப் பெறுவதற்குத் தாம் தயாராகவிருப்பதாகவும் அவர் கூறினார்.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கிலிருந்து பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 21 வருடங்களாகின்றன. கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலைதான்; எமது மண்ணுக்கு மீண்டும் நாம் சென்று வாழ முடியாத சூழல். ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. இருந்தபோதும் அன்று முஸ்லிம்கள் எவ்வாறு வெளியேற்றப்பட்டார்களோ அதனைவிடவும் பயங்கரமான முறையில் சில அதிகாரிகள் முஸ்லிம்களை இன்று வஞ்சிக்கின்றனர். அது குறித்து ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் மற்றும் நாடாளுமன்றத்திலும் தெரிவித்துள்ளேன்.

எந்த சமூகத்திற்கும் அநியாயம் செய்யாத வட மாகாண முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகச் சில சக்திகள் செயற்படுவதை அங்கீகரிக்க முடியாது. வடமாகாண முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். அதற்காக உதவி செய்யுங்கள் என்று நாம் சர்வதேச சமூகத்திடம் கேட்டால், அப்படி இடம்பெயர்ந்த மக்கள் இருக்கின்றார்களா என்றுதான் கேட்கின்றனர். அந்தளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் மழுங்கடிக்கப்பட்டு, மறைக்கப்பட்டுள்ளன.

இது இச்சமூகத்திற்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கற்றல் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட சகல துறைகளிலும் ஒரு பாரிய பின்னடைவைக் கொண்டுள்ளது. இதனைக் கட்டியெழுப்புவதற்குப் பல வருடங்கள் தேவையாகவுள்ளது. எமக்கு மக்கள் தந்துள்ள பதவியைக் கொண்டு அம்மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றால் அதனைத் தூக்கி வீசிவிட்டு, இடம்பெயர்க்கப்பட்ட ஒரு இலட்சம் முஸ்லிம் மக்களையும் ஒன்றுதிரட்டிப் போராடி அதனைப் பெறுவதற்குத் தயாராகவுள்ளேன்.

தேர்தல் காலங்களில் வந்து வாக்குகளைக் கேட்டு அதனைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அம்மக்களைத் தூக்கியெறியும் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளுக்கு இனியும் எமது மக்கள் இடம் கொடுக்கமாட்டார்கள்.

நாம் சார்ந்திருக்கும் வட மாகாண முஸ்லிம்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து வெளிக்கொண்டு வருவதற்குத் தனியாக ஊடகங்கள் இல்லை. ஏனைய சமூகம் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில் அவர்கள் சார்ந்த ஊடகங்கள் செயற்படுகின்றன. அது அவர்களது சுதந்திரம். அதேபோன்று எமது மக்களது அபிலாசைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாமெனக் கௌரவமாகக் கேட்கின்றேன். வடக்கு மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் போராட்டத்திற்கு ஊடகங்கள் தமது பங்களிப்பைத் தர வேண்டும்.

முஸ்லிம்களும் யுத்தத்தால் வெளியேறியவர்கள். அவர்களுக்கும் வீடுகளை அமைத்துத் தாருங்கள் என்று சில அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கேட்டால், அதற்கு வேறு காரணங்களைக் காட்டித் தட்டிக் கழிக்கின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.



என்னிடம் இனவாதமில்லை. எனது அமைச்சுப் பதவிகளைத் தமிழ், முஸ்லிம் மக்களது மேம்பாடுகளுக்கே பயன்படுத்தி வந்துள்ளேன். ஏனெனில் எனது மாவட்டத்தில் வாழும் மக்களை நான் எனது மக்களாகவே பார்க்கின்றேன் என்பதினால்,

இந்நிலையினைப் புரிந்துகொண்டு வட மாகாண முஸ்லிம்கள் தமது தாயக மண்ணில் மீள்குடியேறுவதற்குத் தடையாகவிருப்பவர்கள் அதனை விடுத்துப் பாதிக்கப்பட்ட இந்தச் சமூகத்தின் கௌரவமான மீள்குடியேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ந-5)

## நானிலம் செழிக்க நாடு நலம் பெற வல்லிபுரத்தானே கொடியேற்று

நாலுமறை சாத்திரங்கள் புகழ்பாடும் நாராயணா கொடியேற்று
நானிலம் செழிக நாடு நலம்பெற வல்லிபுரத்தானே கொடியேற்று
உன்னை நம்பி வாழும் உனது அடியார் நலம் பெற கொடியேற்று
தேடியே வந்தவர் தீவினை அகன்று திவ்விய நலமருள கொடியேற்று
ஆரணமாம் கீதையினை பாரினுக்குத் தந்தவனே கொடியேற்று
வல்லியின் மடியினிலே மாந்தருக்கருள சக்கரமானவரே கொடியேற்று
வல்லிபுரம் மீதினிலே வாழ்ந்திருக்கும் திருமாலே கொடியேற்று

(வல்லிபுரம் ஆழ்வார் ஆலய கொடியேற்றம் இன்று)

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### நல்லன, மிக நல்லன, நனி சிறந்தன



மரணம் நாளுக்கு நாள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. சோம்பி இருக்க வேண்டாம். எது எது எப்பொழுது நடக்க வேண்டுமோ அது அது அந்த காலத்தில் நடந்தேறும் என்ற பொய்யான எண்ணத்தினால் சும்மா இருக்காதீர்கள்.! அப்படி எதுவும் நடக்கப்போவதில்லை.

நம் வாழ்நாள் குறுகியது. நாம் ஆசைப்படும் உலகப் பொருட்கள் நிலையற்றவை. அழிந்துபடும் இயல்புடையவை. ஆனால் தமக்காக வாழாது பிறர்க்காக வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள் ஆவர். பிறரெல்லாம் வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்ளே, இறந்துபட்டவர்களே.

பிறரது உரிமையை மறுப்பவர்கள் உரிமையைப் பற்றிப் பேசுவோ, உரிமையுடன் வாழவோ தகுதியுடையவர்கள் தானா? எனவே பயனற்ற கோபத்திலும் எரிச்சல்படுவதிலும் நமது சக்தியை வீணாக்காது அமைதியோடும் ஆண்மையோடும் செயலாற்றுவோம்.

# உலகின் எந்தவொரு நீதிமன்றத்திலும் — வழக்கை எதிர்கொள்ளத் தயார் —

## மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா அறிவிப்பு



(கொழும்பு)

அமெரிக்க நீதிமன்றில் தனக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் முன்னிலையில் பதிலளிக்குமாறு மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வாவுக்கு நியூயோர்க்கின் தெற்கு மாவட்டத்தில் உள்ள மன்ஹட்டன் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பாணை அவரது தனிப்பட்ட வதிவிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அழைப்பாணை அனுப்பிய அமெரிக்க நீதிமன்றத்துக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா 21 நாட்களுக்குள் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே தன் மீதோ தனது கட்டளையின் கீழ் இருந்தவர்கள் மீதோ சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உலகின் எந்த நீதிமன்றத்திலும் வழக்கை எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா கூறியுள்ளார்.

எவரும் தன் மீது குற்றச்சாட்டுகளை சுமத்த முடியும் என்றும் அவற்றை எதிர்கொள்ளத் தயாராகவே இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இது தொடர்பாக நியூயோர்க்கில் தங்கியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் தங்கியுள்ள நேரம் பார்த்து அவருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க்கில் உள்ள இலங்கைக்கான இராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி ஐ.நாவில் உரையாற்றுவதற்கு சற்று முன்னதாகவே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு நியூயோர்க்கில் அளிக்கப்பட்டுள்ள இராஜ தந்திரப் பாதுகாப்பு காரணமாக அவரைக் கைது செய்யவோ தடுத்து வைக்கவோ அவர் மீது குற்றவியல் வழக்குத் தொடுக்கவோ முடியாது.

ஆனால், குடியியல் நடவடிக்கை எடுக்கப்படலாமா என்பது தொடர்பாக தெளிவாகத் தெரியவில்லை.

அதேவேளை, இராஜதந்திரி ஒருவருக்கான பாதுகாப்பு அவர் பணியகத்தில் இருக்கும் போதே செல்லுபடியாகும் என்றும் அவர் பணியாற்றும் இடத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டால் அது செல்லுபடியாகாது என்றும் மனித உரிமைகள் சட்டவாளர் அலி பேடன் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அவரது வசிப்பிடத்துக்கே அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவுக்கான இராஜதந்திர பதவியில் உள்ள ஒருவருக்கு எதிராக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ள இந்த விவகாரத்தை ஐ.நா பொதுச்செயலரின் பணியகத்திடம் கொண்டு செல்வது குறித்து நியூயோர்க்கில் உள்ள இலங்கைக்கான இராஜதந்திரிகள் ஆலோசனை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ள இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப்புலிகளின் கொடூரச் செயல்கள் குறித்து அமெரிக்க நீதிமன்றத்தில் விபரிக்க இது நல்தொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

கேணல் ரமேஸ் ஒரு மோசமான பயங்கரவாதி என்றும் அவர் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரையும் அரந்தலாவில பௌத்த பிக்குகளையும் முஸ்லிம் கிராமவாசிகளையும் படுகொலை செய்தவர் என்றும் குற்றம் சாட்டியுள்ள போத்தபாஜ ராஜபக்ஷ அவரது மனைவியும் இந்தக் கொடூரச் செயல்களில் தொடர்புபட்டிருந்தவர் என்றும் கூறியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## இலங்கைத் தமிழர் ஆதரவு ஊர்திப்பயணம் மதுரையைச் சென்றடைந்துள்ளது

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி கன்னியாகுமரியில் ஆரம்பமான இலங்கைத் தமிழர் ஆதரவு ஊர்திப்பயணம் கடந்த 24ஆம் திகதி மதுரையைச் சென்றடைந்துள்ளது.

தஞ்சை தமிழ்த்தாய் அறக்கட்டளை, தமிழக தமிழ் அமைப்புகள் ஆகியவை இணைந்து இலங்கைத் தமிழர் ஆதரவு ஊர்திப்பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இலங்கைத் தமிழர்களை படுகொலை செய்தமைக்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை செயற்படுத்த மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த ஊர்தி பயணம் நடைபெறுகிறது.

இவர்கள் தங்கள் பயணத்தை கன்னியாகுமரியில் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பித்து அங்கிருந்து நாகர்கோவில், நெல்லை, கோவில்பட்டி, விருதுநகர், திருமங்கலம் வழியாக நேற்று முன்தினம் மதுரையைச் சென்றடைந்துள்ளனர். எதிர்வரும் 3 ஆம் திகதி இலங்கைத் தமிழர் ஆதரவு ஊர்தி பயணம் சென்னையில் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## அ.தி.மு.க, தி.மு.க அல்லாத மூன்றாவது — அணியை உருவாக்க வேண்டும் — திருமாவளவன் வலியுறுத்து

கடந்த ஆண்டில் இலங்கையில் போர் நடந்த சூழலில் முத்துக்குமார் தீக்குளித்த போது அ.தி.மு.க. ,தி.மு.க. அல்லாத மூன்றாவது அணி அமைக்க வேண்டும் என திருமாவளவன் வலியுறுத்தினார். அப்போது அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த தலைவர்களால் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் அ.தி. மு.க. கூட்டணியில் திருமாவளவனை சேர்த்துக் கொள்ளமாட்டோம் என ஜெயலலிதா அறிவித்த நிலையில் திருமாவளவன் தி.மு.க. கூட்டணியில் இணைந்தார். போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இப்போது முற்றிலும் புதிய சூழல் தமிழகத்தில் நிலவுகிறது.

அ.தி.மு.க, தி.மு.க. ஏனைய எல்லா கட்சிகளுமே இந்த இரண்டு கட்சிகளாலும் பாதிக்கப்பட்ட சூழலில் எல்லா கட்சிகளுமே உள்ளாட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றன. விடுதலைச் சிறுத்தைகளும் தனித்துப் போட்டியிட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய திருமாவளன், தி.மு.க., அ.தி.மு.க அல்லாத மூன்றாவது அணி உருவாக வேண்டிய தேவை உள்ளது என்றார். பா.ம.க, ம.தி.மு.க, கம்யூனிஸ்டுகள், இஸ்லாமியக் கட்சிகள் இணைந்து மூன்றாவது அணி அமைக்க வேண்டும்.

அதன்மூலம் மூன்றாவது மாற்று அணி அமைத்து கூட்டணிக் கட்சிகளை மதிக்காத தி.மு.க, அ.தி.மு.க. இரு கட்சிகளுக்கும் பாடம் புகட்ட வேண்டும். அதற்கு முன்னோட்டமாக வரும் திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மூன்றாவது வேட்பாளராக ஒது பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்றார் திருமாவளவன்.

(ஸ்ரீ-2)

## பாதுகாப்பு செயலரின் உத்தரவுக்கு அகழ்வாராய்ச்சி சபை ஆட்சேபம்

(கொழும்பு)

கொழும்பு நூதனசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள சுவரை இடித்து விடுமாறு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடுத்த உத்தரவை அகழ்வாராய்ச்சி சபை ஆட்சேபித்துள்ளது.

இது தொடர்பில் கோத்தபாஜ ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கொழும்பை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் பொது நிறுவனங்கள் மக்களுடன் இலகுவான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நிறுவனங்களுக்கு முன்னால் உள்ள சுவர்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நூதனசாலைக்கு முன்னால் உள்ள சுவர் இடிக்கப்பட்டால் அது நூதனசாலையின் அழகைக் கெடுத்துவிடும். கொழும்பு நூதனசாலை தென்னாசியாவில் உள்ள சிறந்த நூதனசாலையாகும்.

அது 1877 ஆம் ஆண்டு புகழ் பெற்ற கட்டடக்கலைஞர் ஜே.பி .ஸ்மித்தரினால் கட்டப்பட்டது என்பதை அகழ்வாராய்சியாளர்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சுவரை இடிக்க வேண்டாம் என்று கோரி ஜனாதிபதிக்கும் தனியான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தேசிய நூதனசாலை கடந்த 2002 ஆம் ஆண்டு வர்த்தமானியின் மூலம் வரலாற்று இடம் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அதிரடிப்படை இன்ஸ்பெக்டரின் துப்பாக்கிச்சூட்டில் ஏ.எஸ்.பி.பலி

(கொழும்பு)

அம்பாறையில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் (ஏ.எஸ்.பி) அதிரடிப்படை பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவரினால் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மகா ஓயாவிலுள்ள 69 ஆம் அதிரடிப்படை நிலையத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதிரடிப்படையைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார என்பவரே இவ்வாறு சுடப்பட்டவர் ஆவார். கொழும்பில் பாதாள உலக செயற்பாடுகளை முறியடிப்பதில் முன்னின்ற இவர் பின்னர் அம்பாறைக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

(ஸ்ரீ-2)

## ஆஸி.உயர்ஸ்தானிகரின் யாழ்.விஜயம் குறித்து பாதுகாப்பு தரப்பினர் சந்தேகம்

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்தீ குளுக்மானின் அண்மைய யாழ்ப்பாண விஜயம் குறித்து பாதுகாப்பு தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயர்ஸ்தானிகள் குளுக்மான் அண்மையில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான சட்டத்தரணி ஒருவருக்கு சொந்தமான விடுதி ஒன்றில் குளுக்மான் மூன்று நாட்கள் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


இவ்வாறு மூன்று நாட்கள் குளுக்மான் குறித்த விடுதியில் தங்கியிருந்தமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் இந்திய ஊடகவியலாளர் சிலர் இலங்கை தொடர்பில் தயாரித்த விவரணமொன்றுக்கு குறித்த மனித உரிமை விவகார சட்டத்தரணி ஆதரவு வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் இந்த விவரணத்தில் குறித்த பெண் சட்டத்தரணி நேர்காணல் வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# ஸ்முட்ஸ் அசத்தல் ஆட்டம்; வாரியர்ஸிற்கு அடுத்த வெற்றி



ஸ்முட்ஸின் அபார ஆட்டம் கைகொடுக்க வாரியர்ஸ் அணி சம்பியன்ஸ் லீக் தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் இருபது–20 கிரிக்கெட் தொடரில் நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற 4 –வது போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணியும் தெற்கு அவுஸ்திரேலிய அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வாரியர்ஸ் அணி ஸ்முட்ஸின் அபார அரைச் சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டையிழந்து 171 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஸ்முட்ஸ் 65 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 88 ஓட்டங்களையும் மார்க் பவுச்சர் 26 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களையும், இங்ராம் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹரிஸ், கிறிஸ்ரியன் தலா 2 விக்கெட்டுக்களையும், தைட் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 172 ஓட்டங்கள் என்ற வெற்றியிழக்கை விரட்டிய தெற்கு அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 121 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதன் மூலம் வாரியர்ஸ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கிலிங்கர் 34, கிறிஸ்டியன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரி சொற்சோபே 2 விக்கெட்டுக்களையும் ஸ்முட்ஸ், திரோன், அணித் தலைவர் போத்தா, பார்னல் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் வாரியர்ஸ் அணி தொடரில் தான்விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றியை பதிவுசெய்து புள்ளிகள் கணக்கை 4ஆக அதிகரித்தது.

## நியூ. அணியில் 4 புதிய முகங்கள்

சிம்பாவே சுற்றுப்பயணம் செய்யும் நியூசிலாந்து அணி புதிய அணித் தலைவர் ரோஸ் டெய்லர் தலைமையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் 3 புதிய வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். பிரேஸ்வெல், நிக்கோல், கிரேமி அல்ட்ரிட்ஜ் ஆகியோர் சிம்பாவே தொடரில் ஆடுவார்கள். நீண்டநாட்களாக விளையாடாத மில்ஸ் மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

# சோமர்செற் அணியிடம் வீழ்ந்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி

(ஹைதராபாத்)

விறுவிறுப்பான ஆட்டத்தில் சோமர்செற் அணி 5 விக் கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடரில் நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற 5ஆவது போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் சோமர்செற் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கலிஸ் - யூசுப் பதானின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.



இதில் ஜக் கலிஸ் 61 பந்துகளில் (4 பவுண்டரிகள், 4 சிக்ஸ்சர்கள் உட்பட) 74 ஓட்டங்களையும் யூசுப் பதான் 21 பந்துகளில் (4 சிக்ஸ்சர்கள் உட்பட) 39 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் கிரேஹரி 2 விக்கெட்டுக்களையும் தோமஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 162 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை விரட்டிய சோமர்செற் அணி வான் டேர் மேர்வின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 164 ஓட்டங்களை குவித்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் வான்டேர் மேர்வ் 40 பந்துகளில் (9 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 73 ஓட்டங்களையும் அகாம்ரன் ஆட்டமிழக்காமல் 19, சுப்பையா 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பாத்தியா 2 விக்கெட்டுகளையும் அப்துல்லா சகிப் அல் ஹசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் சோமர்செற் அணி 2 புள்ளி களைப் பெற்றது.

# மலேசிய உயர் கல்வியைத் தொடர மாணவர்களுக்கு வழிகாட்டிய கல்வி கண்காட்சி

வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்கு குறைந்த செலவில் புதிய பல கற்கைநெறிகளைத் தொடர்ந்து விரும்பிய நாட்டிற்குச் செல்வதற்கான பாதைகளுக்கு யாழ்.ஞானம்ஸ் உல்லாச விடுதியில் நடைபெற்ற மலேசிய உயர்கல்விக் கண்காட்சி வழிகாட்டியது.

சிகரம் ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் மலேசியாவைச் சேர்ந்த 10 முன்னணி பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, தமது பல்கலைக் கழகங்களில் தொடரக்கூடிய பல்வேறு கற்கை நெறிகள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

காலை 08.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் கண்காட்சி ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

மலேசியாவில் உயர்கல்வி தொடர்பாக இங்கு விளக்கிப் பேசிய மலேசிய கல்விக் கண்காட்சி ஒருங்கிணைப்பாளரான கபிலன் முனியாண்டி, குறைந்த செலவில் விரும்பிய எந்தவொரு கற்கைநெறியையும் தொடர்ந்து தமது உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மலேசியப் பல்கலைக்கழகங்கள் வாய்ப்பளிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

எந்தவொரு விசா நெருக்கடியுமின்றி மாணவர்கள் மலேசியாவுக்கு வந்து உலகின் பல நாடுகளின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டப் படிப்புகளைத் தொடர முடியும். முதலாவது அல்லது இரண்டாவது வருடம் மலேசியாவில் பட்டப் படிப்பை நிறைவு செய்துவிட்டு அதன்பின்னர் விரும்பிய நாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு கற்கைநெறியை மாற்றலாக்கிச்செல்லவும் முடியும் என்றார் அவர்.

இவை தவிரவும் மலேசியாவுக்குச் செல்வதற்கு வங்கிப் பணம் காட்டவேண்டிய அவசியமில்லை எனவும் மாணவர்களுக்கான விசா அனுமதியை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே பெற்றுத் தருவதுடன் மலேசிய விமான நிலையத்திலிருந்தே மாணவர்களைக் குறிப்பிட்ட பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் நேரடியாக வந்து அழைத்துச் செல்வர் என்றும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள் மற்றும் பெற்றோர் உட்பட பலர் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

### 10 பல்கலைக்கழகங்கள்

பிரித்தானியாவின் முதல் 10 பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கும் நொட்டிங்காம் பல்கலைக்கழகத்தின் மலேசியக் கிளை உட்பட இன்றி, மாஷா, கே.எல்.ஐ.யு.சி., சேஜி, சைற்றோ, யு.சி.எஸ்.ஐ., டார் கொலிஜ், யு.சி.ரி.ஐ., எம்.எஸ்.யு. ஆகிய மலேசியாவின் முன்னணி 10 பல் கலைக் கழகங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டு தமது பல்கலைக்கழக கற்கைநெறிகள் பற்றிய விளக்கத்தை வழங்கின.

இந்தப் பல்கலைக்கழகங்கள் ஊடாக, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்புகளைத் தொடரக்கூடிய வாய்ப்புகள் பற்றியும் அந்தந்த நாடுகளிலேயே பட்டக் கல்வியைத் தொடரக் கூடிய வாய்ப்புகள் தொடர்பாகவும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

### எந்த மட்டத்தினருக்கும் ஏராளமான கற்கைநெறிகள்

க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்தவர்கள் மாத்திரமின்றி, சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் மற்றும் சாதாரண தரச் சித்தியில்லாதவர்களுக்கும் ஏராளமான கற்கைநெறிகளைத் தொடர்ந்து சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறக்கூடிய வழிகளை இந்தக் கண்காட்சி காட்டியது.

உயர்கல்விச் சித்தியுள்ளவர்கள் தொடரக்கூடிய தொழில் உத்தரவாதமான ஏராளமான பட்டக்கல்விகள் பற்றிய விளக்கம் இங்கு அளிக்கப்பட்டதுடன் சாதாரணதர சித்தியுடனும் சித்தியில்லாமலும் பட்டக் கல்வியைத் தொடரவும் தொழிற்கல்வியைத் தொடர்ந்து சிறந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளவும் இங்கு சிறந்த வழிகாட்டல் வழங்கப்பட்டது.

## கிறிஸ் ஹயில் தொடர்ந்து புறக்கணிப்பு

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியிலிருந்து ஹயில் புறக்கணிக்கப்பட்டு வருகிறார். சமீபத்தில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர கிரிக்கெட் சபைத் தலைவர் ஹிலாரேயை ஹயில் சந்தித்துப் பேசினார். அத்தோடு பிரச்சினை முடிந்து ஹயில் மீண்டும் அணிக்குத் தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்யும் அணியில் ஹயில், சர்வான், பிராவோ ஆகியோர் இடம் பெறவில்லை. அதேசமயம் விக்கெட் காப்பாளர் தினேஷ் ராம்தீன், சுழற்பந்து வீச்சாளர் ஷில்லிங் போர்ட் ஆகியோர் இடம்பெற் றுள்ளனர்.

இத்தொடர் ஒக்டோபர் 7ஆம் திகதி ஆரம்பமாகின்றது.




மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



சண் சலூன்
பாடசாலை அருகாமை
கைவேலி, புதுக்குடியிருப்பு
(மீண்டும் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்) (சி-4514)

ICT மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது
சி.சிவசன் எழுதிய
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
கிடைக்கும் இடம்
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை, நெல்லியடி.
(6411)

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134




## யாழ்.கொழும்பு சேவை...

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வழி அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. இதனால் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளவத்தைப் பொலிஸாரால் 8 பஸ்கள் தடுத்து வைக்கப்பட்டன.

இந்நிலையிலேயே வெள்ளவத்தைப் பொலிஸார் தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஆசனப்பதிவு முகவர்களையும் நேற்றுக் காலை வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சந்திப்பொன்றை நடத்தினர்.

இதன்போது யாழ்.-கொழும்பு பஸ் சேவையில் ஈடுபடும் 5 தனியார் நிறுவனங்களை ஒன்றிணைத்த குழுவொன்று அமைக்கப்பட்டது.

அத்துடன் யாழ்.-கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் கட்டாயம் வழி அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டுமென பொலிஸார் வலியுறுத்தினர்.

எனவே பயணிகள் வழி அனுமதிப் பத்திரமுள்ள பஸ்களில் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ள பொலிஸார் இல்லையேல் நடுவழியில் பயணிகள் இறக்கிவிடப்பட்டு பஸ் பறிமுதல் செய்யப்படுமெனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் முறைகேடான வகையில் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் முகவர் நிறுவனங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படுமென வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்.-கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் குழு இன்று தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர், பொலிஸ்மா அதிபர் மற்றும் கொழும்புப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்கள் தெஹிவளை புகையிரத நிலையத்திற்கு அண்மையாகவுள்ள இடத்தில் தரித்து நின்று சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## இருவேறு விபத்துச் சம்பவம் நால்வர் படுகாயமுற்றனர்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 7 மணியளவில் இளவாலைச் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இளவாலையைச் சேர்ந்த ஆர்.தவநேசன் (வயது 29), சங்கானையைச் சேர்ந்த அலெக்ஸ் சாண்டர் (வயது 36) ஆகிய இருவருமே இவ் விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

இதேவேளை நேற்றிரவு 6 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் முன்னே சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸினை மோட்டார் சைக்கிளில் முந்திச் செல்ல முற்பட்டவேளை மோட்டார் சைக்கிள் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குருநகரைச் சேர்ந்த கே.கவாஸ்கர் (வயது 22) மற்றும் கே.கிருஷ்ணரூபன் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரு கின்றனர். (ந-8)

## நல்லூர்க்கோட்ட அதிபர் கூட்டம்

நல்லூர்க் கல்விக் கோட்டத்தின் அதிபர் கூட்டம் நாளை மறுதினம் 28ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12மணிக்கு யா/கலட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்டசகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந)

## வரதராஜப்...

எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் விரைவில் இலங்கைவரவுள்ளார் என்றும் மீண்டும் அவருடன் அரசதரப்பு பேசவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ந-5)

## அரசு தயாரித்த ஆவ...

ஜனாதிபதியைப் பார்த்து பாலித கோஹன கூறியுள்ளார்.

இதனை இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர் மத்யூ ரசல் லீ காணொளியில் பதிவு செய்துள்ளார். பாலித கோஹன கூறியது இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்திற்குப் போட்டியாக இலங்கை அரசாங்கம் தயாரித்த Lies Agreed To ஆவணப் படமே என்று இன்னர்சிற்றி பிரஸ் கூறியுள்ளது.

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படத்தின் ஒரு இறுவட்டு ஐ.நா. பொதுச் செயலருக்கு அனுப்பப்பட்டு நீண்ட நாட்களாகியும் அவர் அதனைப் பார்வையிடவில்லை.

ஐ.நா. பொதுச்செயலர் இந்த ஆவணப் படத்தை இன்னமும் பார்வையிடவில்லை என்றும் ஆனால் அதன் உள்ளடக்கம் பற்றி அவர் அறிந்துகொண்டுள்ளதாகவும் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டீன் நெசர்கி கடந்த 22ஆம் திகதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஜனாதிபதி மகிந்த ராஜ...

பெற்ற இறுதிக்கட்டப் போரின் பேரது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதை அடுத்து அவர் அவசரமாக நாடு திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோன்று, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் அமெரிக்க நீதிமன்றம் கடந்த 23 ஆம் திகதி அழைப்பாணை அனுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இனப்பிரச்சினையைத்...

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச சமூகம் ஒருபக்கச் சார்பான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளை மனதில் கொண்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை கடந்த 23 ஆம் திகதி மாலை நியூயோர்க்கில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதன்போது இலங்கை தனது பிரச்சினைகளைத்தானே தீர்த்துக் கொண்டிருந்தால் இலங்கை விவகாரத்தில் வெளிநாடுகள் ஏன் தலையிடுகின்றன என மகிந்த ராஜபக்ஷவிடம் மன்மோகன் சிங் கேள்வி எழுப்பியதாக இந்திய பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு தலையீட்டைத் தடுக்க தமிழ் மக்களின் பிரச்சினைகளை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் தீர்க்க வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியதாக இச்செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என ஜனாதிபதி மகிந்த தனதுரையில் கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் முகமாகவே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ந-5)

## போர்க் குற்றச்சாட்டுத் தொட...

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 66 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போதே இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு நம்பகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மகிந்த ராஜபக்ஷவிடம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மோதல்களுக்கு காரணமான இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள்சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நியூயோர்க் செயலகத்தின் பிரதிநிதி ஐவன் சிமோனோவிக் மோதல்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான சிறப்பு ஆலோசகர் மாகொற் வோல்ஸ்ரோம் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரும் கலந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தின் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பாலித்த கொஹன்ன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அமெரிக்காவுக்கான தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மனித உரிமைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பான் கீ மூன் விரிவாக கலந்துரையாடியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு உட்பட மேற்கத்தைய நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந் நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இலங்கை...

களை மேற்கொண்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை எதிர்வரும் நவம்பரில் வெளியாகும் நிலையில் அதனை எதிர்வரும் 19ஆவது மனிதவுரிமைகள் பேரவை அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற யோசனையைக் கொண்டுவர கனேடியக் குழு முயற்சித்து வருகிறது.

அதனைத் தற்போது நடைபெற்று வரும் 18ஆவது அமர்வின் எதிர்கால அட்டவணையில் சேர்க்க கனடா முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

எனினும் இதனைத் தடுப்பதற்காக அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் மீண்டும் ஜெனீவாவுக்குச் சென்று கலந்தாலோசனைகளை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.